"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

பவ வருஷம் 1994 ஐப்பசி கார்த்திகை மார்கழி

மலர் 4 இதழ் 1

# சிவநெறி

# SIVANERI

## முத்திங்கள் சஞ்சிகை

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வெளியீடு




உள்ளே.................


- 1624 இல் திருக்கோணேஸ்வரம்
- வாழ்க்கையில் வெற்றிபெற
- இந்துக் கிரியைகள்
- ஊர்க் குளத்து அம்மன்
- கல்வி கற்ற இளைஞர்கள் தெய்வீக பணி ஆற்ற வேண்டும்
- மணிவாசகர் தந்த திருவாசகத்தின் ஒரு நோக்கு
- சிரத்தையைப் போற்றுவோம்
- சித்து அறிவியல் சுவட்டில்
- முப்பொருள்கள்
- சிவபூமி - திருமந்திர விளக்கம்
- மாணவர் உலகு
- வினாவிடைப் புதிர்


விலை ரூபா 12/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்நடத்தை

— ஸ்ரீ சுவாமி சிவானந்தா அருளியது —

ஒரு மனிதன் இறந்து விடலாம். ஆனால் அவனுடைய எண்ணங்கள் நடத்தை என்பன நிலைத்து நிற்கும். நடத்தையே மனிதனுக்கு உண்மையான வேகத்தையும், சக்தியையும் கொடுக்கிறது. ''ஞானமே சக்தி'' என்கிறான். ஆனால் நடத்தையே சக்தி என்று நான் கூறுகின்றேன்.

நடத்தையின்றி ஞானத்தை அடைய இயலாது. நன்நடத்தை இல்லாத மனிதன் இவ்வுலகில் நடைப்பிணத்திற்கு ஒப்பாவான். சமூகத்தால் அவன் நிந்திக்கப்பட்டு அசட்டை செய்யப்படுகிறான். நீங்கள் வாழ்வில் வெற்றி பெற விரும்பினால், நீங்கள் மற்றவரைக் கவர விரும்பினால், நீங்கள் ஆன்மீக மார்க்கத்தில் நன்கு முன்னேறவிரும்பினால் இறை உணர்வு பெற வேண்டுமென்று நீங்கள் ஆசைப்பட்டால் உங்களிடம் மாசு மறுவற்ற களங்கமற்ற நடத்தை இருத்தல் வேண்டும். மனிதனுடைய சாராம்சம் நடத்தை. ஒரு மனிதனுடைய நடத்தை அவனை நிலைபெற்று இருக்கச் செய்கிறது. சங்கரர், புத்தர், இயேசு மற்றும் ஏனைய ரிஷிகள் முதலானோரை மக்கள் இன்றும் நினைந்து போற்றி வருகின்றனர் என்றால் அதற்குக் காரணம் அவர்களிடம் காணப்பட்ட அற்புதமான நடத்தைதான். அவர்கள் மக்களைக் கவர்ந்து தங்களுடைய நடத்தைச் சக்தியின் மூலம் மற்றவர்களை மாற்றினார்கள்.

நடத்தைக்கு முன்னிலையில் பணம் துரும்புக்குச் சமானம். நடத்தை ஒரு மகாபலம் பொருந்திய ஆத்ம சக்தியாகும். அது வெகு தூரத்திற்குத் தனது நறுமணத்தைப் பரப்புகின்ற நன்மலரைப் போன்றது. நற்பண்புகளும், நன்நடத்தையும் உடைய மனிதனிடம் அபாரமாக வியக்தித்துவம் காணப்படுகின்றது. வியக்தித்துவம் என்பது நடத்தையே அன்றி வேறில்லை. ஒரு மனிதன் திறமை வாய்ந்த கலைஞனாக இருக்கலாம். அவர் ஒரு பெரிய சங்கீத வித்வானாக இருக்கலாம். அவர் ஒரு நல்ல ஞானியாகவோ அல்லது பெரிய விஞ்ஞானியாகவோ இருக்கலாம். ஆனால் அவரிடம் நன்நடத்தை என்பது இல்லையானால் சமூகத்தில் அவருக்கு உண்மையான அந்தஸ்து கிடையாது. மக்கள் அவரைப் பகிஷ்கரித்து விடுவர்.

தொகுப்பு - க. கனகராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்.

மலரயனுந் திருமாலுங் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டு தொழப் புரிசடையார்
குலவுநடந் தருந் தில்லைக் குடதிசைக் கோபுரவாயில்
நிலவிய கற்பகக் கன்றினிறைமலர்த் தாளிணை போற்றி.

திருச்சிற்றம்பலம்.



உ
சிவமயம்



## நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்.

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென்று உருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

வைராக்கியம் என்னும் சொல் மனித வாழ்க்கைக்கு மிக இன்றியமையாத கருத்து மிக்க சொல்லாகும். இச்சொல் தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் இடம் பெற்றுள்ளதை நாம் அறிவோம். வாழ்க்கையும் வைராக்கியமும் என்ற கருத்துச் செறிந்த நூலையே மறைந்த பேரறிஞர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் எமக்குத் தந்துள்ளார்கள்.

'வைராக்கியம்' என்றதும் எமது சமுதாயம் நன்மைக்கு எதிரான கருத்துள்ள சொல்லாகவே பெரும்பாலும் கருதுகின்றது. இது நல்ல செயல்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய கருத்தாழம் மிக்க சொல்லாகும். பிழையாகச் சிந்திப்பவர்கள் இச்சுருத்தைப் பிழையான வகையில், பிழையான வழிகளில் பயன்படுத்துகின்றார்கள். இதனால் சமுதாயத்திற்கு எந்த நலனும் ஏற்படுவதில்லை.

இச்சொல்லின் கருத்தை அடிப்படையாக வைத்து திருவள்ளுவப் பெருந்தகை ''தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று'' என்று வைராக்கிய வாழ்க்கையின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியுள்ளார். தமது சொந்த வாழ்வில் இலட்சியமாயினும் சரி, குடும்ப வாழ்வின் இலட்சியமாயினும் சரி, சமுதாய வாழ்வின் இலட்சியமாயினும் சரி, அந்த இலக்கை அடைய வைராக்கியம் மிக இன்றியமையாததாகின்றது.

வைராக்கியம் இல்லாதோர் உயர்வுற்றதாக புகழொடு தோன்றியதாக வரலாறே இல்லை. அழிவுப்பாதைக்கான வைராக்கியத்தை விடுத்து ஆக்கப்பாதைக்கான வைராக்கியத்தை முன்னெடுத்துச் செல்வோம். ஆக்கப்பாதைக்காக அடியெடுத்து வைக்கும் தனிமனிதனுக்கோ அல்லது சமுதாய நோக்கம் கொண்ட அமைப்புகளுக்கோ எமது பூரண ஆதரவை வழங்குவோம் என்று வைராக்கியம் கொள்வோம்

சைவத்தமிழ் மக்களுக்காய் தம்மை என்றும் அர்ப்பணிக்க வேண்டும் என்ற உயரிய வைராக்கியத்தைக் கொண்டு சிறப்புடன் விளங்குவதே திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை. சைவத்தமிழ்ச் சமுதாயமே இப்பேரவையின் பணிக்குப் பேருதவி புரிய வேண்டும்.

பேரவையால் வெளிவரும் சிவநெறிச் சஞ்சிகையை எமது சமுதாயம் மனமார ஆதரித்துப் படித்துப் பயன் பெற வேண்டும். இதுவரை தொடர்ந்து ரூபா 10/- ஆக விற்பனையாகி வந்த சிவநெறி, இவ்விதழிலிருந்து ரூபா 12/- ஆக விலையில் மாற்றத்தை அடைகின்றது. பத்திரிகைக்கான ஆக்கப் பொருட்களின் செலவினங்களின் உயர்வே இதற்குக் காரணமாகும். உங்களின் நல்லாதரவு சிவநெறிக்கு என்றும் உள்ளது என்ற நம்பிக்கை எமக்குண்டு. சிவநெறியின் வாசக அன்பர்களுக்கு எமது மனநிறைவான வணக்கத்தையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்வதோடு சிவநெறி வளர உங்கள் பேராதரவையும் வேண்டி நிற்கின்றோம்.

'ஆசிரியர்'

---

## "கற்பூர ஆரத்தி தத்துவம்"

ஆத்மா பரமாத்மாவோடு கலப்பதைக் குறிக்கும் கற்பூரம் வெள்ளையானது. அது சுத்த சத்துவ குணமுள்ள ஆத்மாவைக் குறிக்கும். கற்பூரத்தை ஏற்றியவுடன் அது தீபம்போல எரிவது ஞானாக்கினியால் மலம் நீங்கப் பெற்ற ஆன்மாவானது சிவகரணம் பெற்று நிற்பதைக் காட்டும்; கற்பூரம் இறுதியில் ஒன்றுமின்றிக் கரைந்து போவதுபோல ஆன்மாவானது சரீரங்களெல்லாம் நீங்கி இறைவன் திருவடி சேரும். இதைக் காட்டுவதே கற்பூர தீபாராதனையின் தத்துவமாகும்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்க் குளத்தம்மன்

— தாமரைத் தீவான் —

திருக்கோணமலை மாவட்டத்தில் - கிண்ணியாப் பகுதியைச்சேர்ந்த தாமரைவில் ஈச்சந்தீவு, ஆலங்கேணி, சமாவச்சதீவு, பூவரசந்தீவு, கண்டலடியூற்று, உப்பாறு காரைவெட்டுவான் மயிலப்பன்சேனை போன்ற பல ஊர் மக்களும் பயிர்த்தொழில் செய்து வந்த - வருகின்ற - இடம் 1 - 2கல் தொலைவிலுள்ள, 'கண்டல்காட்டுவெளி'ப் பகுதியாகும் அது கொய்யாம்புளி வெல்லந்தாங்கியிலிருந்து - குத்திப்பாஞ்சகிடங்கு, சோலைவெட்டுவான் வரை கிழக்கு மேற்காகவும - பொன்னாவரங்குடா. கிழவி ஓடையிலிருந்து கோணன்குளம், பொட்டல் குளம் வரை வடக்குத் தெற்காகவும் பரந்து கிடக்கின்ற பெருவெளியாகும். அதன் நடுப்பகுதியிலே ஊர்த்திடல் உள்ளது (அருகில் ஊர்க்குளம் உண்டு) மாரியில் வெள்ளநீர் பரவும் வேளையில் இத்திடல் மட்டும் மூடிப்பரவாத காரணத்தால் 'ஊர்த்தீவு' என்றும் சொல்வார்கள். ஈச்சந்தீவு மக்கள் 'குல்லா' விலும் செல்வார்கள் தமிழ்மக்களும், இஸ்லாம்மக்களும் இணைந்து பயிர் செய்து வாழ்வதுண்டு. வயலெல்லாம் நெற்பயிரும். திடலெல்லாம் சோளன் - கச்சானுமாய் (மற்றும்) பசுமையாய்க் காட்சி தரும் அத்திடலின் நடுப்பகுதி 'சிங்கிலி'க் காட்டாலும் பாவட்டங்காட்டிலும் நிரம்பியிருக்கும் சிங்கிலி' யின் உச்சிகளில் தூக்கணங்குருவிக் கூடுகள் ஆடிக்கொண்டிருக்கும் 'பேய்க்' கொவ்வைகளும், கொடித் 'தும்பை'களும் படர்ந்து காய்ந்திருக்கும் சிங்கிலிக் கொப்பினில் தூக்கணங்கூடுகள் சிருடன் தொங்கிடுமாம். எங்குமே தும்பைகள் ஏறிப் படர்ந்திடும் எங்களின் ஊர்க்குளமாம் என்னும் கவி இதனை விளக்கும். இது மிகப் பழைய ஊர் என்பதற்குச் சான்றாக இங்கே பழைய - தடித்த மட்பாண்ட ஓடுகள் கண்டெடுக்கப்பட்டதுண்டு. அதில் ஆய்வு நிகழாமையால் அப்படியே மங்கிப் போய்விட்டது.

நான் அறிந்தவரை கடந்த நாற்பதுகளில் ஐம்பதுகளில் அறுபதுகளில் எல்லாம் அங்கிருந்த ஊர்த்திடல பிள்ளையார் கோயிலும். (ஓலையால் வேயப்பட்டுச் சிமெந்திடப்பட்ட குடிசை) ஊர்க்குளத்து அம்மன் கோயிலும் பிரசித்தி பெற்றிருந்தன. அப்குபதியில் பயிர்செய்து வாழும் தமிழ் மக்கள் அனைவரும் ஒவ்வோராண்டும் மாரிவேளாண்மை வெட்டு முடிந்ததும் பிள்ளையாருக்குப் பெரியதோர் 'மோதக பூசையும்' அம்மனுக்குப் பெரியதோர் மடையும், தப்பாமல் வைப்பார்கள், அம்மன் மடையில் 'சாமி' ஆடுவதும் உண்டு. அத்துடன் 'சிங்கிலி'க்காட்டில் 'தெய்வத்' திற்கும் வயல் மஞ்சள் வர்ணாப்புற்றில் 'நாக' தம்பிரானுக்கும் செய்வதும் தவறுவதில்லை. நெல் பயிராயிருக்கும் போதே 'நாக' தம்பிரானுக்குச் செய்து - பால் பழம் வைத்து அந்தத்தீர்த்தத்தை வயலைச்சுற்றித் தெளிப்பார்கள். 'ஈப்பூச்சி' விழாமல் இருக்க (இந்நாளில் மருந்து விசிறுகிறார்கள்) வெட்டியம் விளைவு தந்த மகிழ்வால் முதல் வேலையாக ஆத்திமரத்தடி மூத்த பிள்ளையாருக்கு மோதகப்பொங்கல் பொங்கி வருவோர்க்கெல்லாம் வழங்கி மகிழ்வார்கள். (இஸ்லாமியர்களும் வருவார்கள - நேர்கடன்கள் தருவார்கள்) அடுத்து குளத்தின் கிழக்கே உள்ள 'நறுவிலி' மரத்தடிப்புற்றோரத்தில் அம்மனுக்கு மடை வைப்பார்கள். வைக்கும் பூசாரிக்கே சாமி வருவதுமுண்டு. கிண்ணியா ஊற்றடிக் கோயிலின் ஐயர் வந்து மடை வைத்துச் சாமி ஆடிய காலமும் உண்டு

52 இல் என்னால் ஆக்கப்பட்டு ஆசிரிய கலாசாலைக்கு ஒப்புவிக்கப்பட்ட வன்செயலால் அழிவுற்ற 'இராசனின் பாரச' த்திலுள்ள அம்மன் காவியம் ஐம்பதில் நினைவிலுள்ள ஒன்றைச் சுட்டிக்காட்டுவது இங்கு பொருந்துமென நினைக்கின்றேன்.

'' அங்கேபார் உந்தனது மூத்த மகனாரை
அழகான ஆத்திநிழல் வீற்றிருக்கின்றார்,
எங்கிருந்தும் வந்து இடுவார்கள் பொங்கள்,
இனிப்பான மோதகம் எப்போதுமுண்டாம்,
தங்கியே வயல் காக்கும் ஊர்க்குளத்தாயே,
தனயனது காவலும் மறுபுறத்துண்டாம்,
உங்களது அருளாலே உயிர் வாழுமெங்கள்,
உள்ளத்திலே யமர்ந்தாளுவாயம்மா,

இவ்வாறே பிள்ளையாருக்காகிய காவடிப் பாடல்களில் நினைவிலுள்ள ஒன்று :-

'' மருப்பொடிந்து எழுதுகோ லெனவே கொண்டு
மகாமேரு மலையினையே ஏடதாக்கி
விருப்புடனே வியாசர் உரை பாரதத்தை
வேகமுடனே எழுதிவிட்ட தேவா,
கருப்புவில் கொண்ட மன்மதனைச் சீறிக்
கருதரிய நெற்றியிலோர் கண்ணுங் கொண்டு

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவாசகனார் தந்த திருவாசகத்தின்
# ஒரு நோக்கு

— க. செகஜரெத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர், நிலாவெளி)

"அல்லல் பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித்
திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து
சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார்
சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து"

மாணிக்கவாசக சுவாமிகள் தந்த இத்திருவாக்கில் நாம் உற்றுக் கவனிக்கப்பாலது "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோரும் ஏத்தப் பணிந்து" என்பதாகும்.

'பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர்' எங்கே செல்வர்? சிவபுரத்தில் உள்ள சிவனடிக்கீழ்ச் செல்வர். சிவபுரத்தில் உள்ள சிவனடியார் பல்லோரும் பணிந்து ஏத்தச் செல்வர்.

ஆகவே நாம் தேவார திருவாசகங்கள், புராணங்கள் ஆகிய திருமுறைகளைப் படிக்கும்போது விரிவான விளக்கம் இல்லாவிட்டாலும் சொற்களின் பொருளை மட்டுமாவது உணர்ந்து ஓத வேண்டும்.

முன்னாளில் ஆலயங்களிலே தேவாரத்திருமுறைகளைப் பண்ணோடும் இசையோடும் இராகத்தோடும் பாடிவந்தார்கள். வருவாய்மிக்கதும், பிரசித்தி பெற்றதும் அடியார்க்கு அளவில்லா அருள் புரிவதுமான திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம் முதலிய ஆலயங்களில் பூசை வேளைகளில் திருமுறைகளை ஓதுவதற்கு ஓதுவார்களை நியமித்திருந்தார்கள். தற்போது முறையாக பண் இசை இராகத்தோடு திருமுறைகளை திருத்தலத்தில் பாட முன்வருவோர் மிகக் குறைவே. அதனால் பூசை நேரங்களில் ஏதோ நமக்குத் தெரிந்தளவில் பாடி வருகிறோம். பண் இராகம் தெரியாவிடிலும் நாம் பாட்டின் பொருளுணர்ந்து சொல்ல வேண்டுமென்பதை மேற்காட்டிய மணிவாசகனார் வாக்கு நமக்கு வற்புறுத்துகிறது.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

(3ம் பக்கத்தொடர்ச்சி)

இருப்பின்றி எரித்த சிவன் ஈன்றமைந்தா
எம்தீவின் விநாயகரே இறைவா போற்றி

பிறகு மிகவும் பயபக்தியுடன் தெய்வத்திற்கு இனிப்பில்லாப் புக்கை படைப்பார்கள். இவையெல்லாக் கடன்களையும் முடித்த பின்பே நெல்லை வீட்டிற்குக் கொண்டு போவதோ, விற்பதோ எல்லாம் நிகழும்.

பிறகு எழுபதுகளின் பின்னர் படிப்படியாகத் தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து சென்றமையால் இக்கோயில்களும் பூசைகளும் கவனிப்பாரற்றுப் போயின. இடையிடையே யாராவது பழையவர்கள் சென்று கற்பூரம் கொளுத்தி வழிபட்டு வருவதுண்டு. ஒரு காலத்தில் மாடு காணாமற் போனால் கூட தேடிக்கிடையாது விட்டால் ஊர்த்தீவு பிள்ளையாருக்கு ஒரு நேர்த்திக்கடன் வைப்பர். ஒரு கிழமைக்குள் மாட்டைக் கண்டடைந்து விடுவர். அந்த அளவிற்கு உண்மையான பிள்ளையாராக ஆத்திமரத்தில் மீன் வலையைக் காயப்போட்டவருக்குக் காய்ச்சலை வருவித்தவராக இருந்ததும் உண்டு. அத்தகு தெய்வங்களைக் கடந்த வன்செயலுடன் அடியோடு காணவில்லை. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்பதும் உண்மைதான் போலும், இன்று குளமும் திடலும் உண்டானாலும் தமிழ் மக்கள் யாரும் இல்லாமையால் ஆத்திமரமும் இல்லை. வெளியில் கல்லுருவில் காணப்பட்டதும் இல்லை.

நறுவிலி மரமும் இல்லை. அம்மன் இருந்த அடையாளமும் இல்லை. காணற்கரிய சிங்கிலிக் காடும் இல்லை. இத்தெய்வங்களின் கதைகள் போலவே தமிழ் இனமும் கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகினாலும் மீண்டும் கட்டெறும்பு வளர்ந்து கழுதையாகவும் மாறலாம். ஏனெனில் வரலாற்றில் எழுச்சியுமுண்டு வீழ்ச்சியுமுண்டு. அது ஆட்சியையும் மக்களையும் பொறுத்தது. இந்த ஊர்க்குளத்தம்மன் (பிள்ளையார்) வரலாறு மறுக்கவோ, மறைக்கவோ முடியாத ஒன்று என்பதை இன்றுமுள்ள அக்காலக் கண்டற் காட்டு மக்கள் நினைத்துப் பார்த்து உணர்வர் என நான் நம்புகின்றேன்.

பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும்,(6)
தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்,
(7)

(பட்டினத்தடிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4ம் பக்கத்தொடர்ச்சி)

பொருளை அறிந்து ஓதும்போது நமது மனதில் இறைபக்தியுண்டாகிறது ... மனம் உருகுகிறது இத னாலே நமது உள்ளம் ஈசனார்க்குப் பெருங் கோயி லாகிறது. 'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டு வது' என சுவாமி விபுலானந்தர் கூறியது போல எமது மனம் நெக்குருகின்றது. தேகம் புளகாங்கிதம் அடைகிறது. கண்கள் ஆனந்தக்கண்ணீரைச் சொரி கின்றது. நாம் மெய்மறந்து சிந்தையடங்கி நிற்கின் றோம். உள்ளம் தூய்மையாகிறது - கமலமாகிறது. சில விநாடி இது நிகழ்கிறது. ஆகவே நாம் பொரு ளுணர்ந்து பாடினோமாகில் இறையருளை இலகுவில் பெற வாய்ப்பு உண்டாகுமன்றோ. தவிர பொரு ளுணர்ந்து ஓதினால் பாடலில் பிழைகள் ஏற்பட வாய்ப்பில்லை. இன்று ஆலயங்களிலோ அன்றி ஏனைய நல் நிகழ்வுகளின் போதோ திருமுறைகளை ஓதும்போது பொருள் விளங்காமையால் பலர் பிழை விட்டுப் பாடுகிறார்கள். இவற்றில் அவதானித்த சிலவற்றை உதாரணத்திற்காகக் கூற விழைகின் றேன்.

## தேவாரம்

''நிரைகழலரவம் சிலம்பொலியலம்பும் நிமலர் நீறணி திருமேனி ... '' எனுந் திருப்பதிகத்தில் ''அளப்பருங் கனமணி'' என்பதைத் தவறாக ''அளப்பெருங் கனமணி'' என்றே படிக்கிறார்கள். அளப்பருங் கனமணி எனும்போது அளந்து கணக் கிட முடியாத, பெறுமதி கணிக்க முடியாத மிகுதி யான இரத்தினங்கள் என்பது பொருளாகும் அதை விடுத்து, அளப்பெருங் கனமணி எனும்போது பெரிய கன இரத்தினங்கள் எனப் பொருள் கொள்ளின், அளப் என்ற சொல் தனித்துக் கருத்தில்லாது நிற் கின்றது. பிரித்துப் பார்க்கும்போது அளப்ப எருங் கனமணி என்று வந்து எருங் என்பது எவ்வித கருத்தையும் கொடுப்பதாயில்லை. ஆகவே ''அளப் பருங் கனமணி'' என்பதே என் சிற்றறிவுக்கு எட் டிய அறிஞர்கள் இது பிழையெனில் சரியானதை எடுத்துக் கூறின் சைவசமயிகளுக்கு பேருதவி புரிந்த தாய் அமையும் என்பது இச்சிறியேனின் கருத்தாகும்.

## புராணம்

செறிதரும் உயிர்தொறும் திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவுமாக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம்.

இதில் ''அறுவகை நெறிகளும் பிறவுமாக்கிய'' என்பதைத் தவறாக பிறவுமாகிய என்று பாடுகிறார் கள் இதன்படி பார்க்கின் இறைவிதான் அறுவகை நெறிகளும் பிறவுமாகிறாள். இறைவி ஆக்கினவரே யல்லாமல் ஆகியவ(ள்) அல்ல என்பது கவனத்திற் கொள்ளவேண்டியது எனவே 'பிறவுமாக்கிய' என் பதே சரியானதாகின்றது.

'தாவறு முலகெலாந் தந்த நான்முகத் தேவு தன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர் நாவு தொறிருந்திடு நலங்கொள் வாணி'' என்னும் புரா ணத்தில் 'நான்முகன் தேவுதன் துணைவியாய்' எனத்தவறாய்ப் பாடுகிறார்கள். இவ்வாறு பாடின் நான்முகன் வேறாகவும், தேவுதன்துணைவி வேறாக வும் பொருள்படுகின்றதே தவிர, நான்முகனின் தேவி அதாவது பிரமாவின் தேவி எனும் பொருள் பெறப்படாமல் போய்விடுகிறது ஆகவே ''நான் முகத்தேவு தன்துணைவியாய் என்றே பாடுவது பொருத்தமானதும் சரியானதுமானதாகும்.

''மண்ணுலகத்தினிற் பிறவிமாசற எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுற'' எனும் புராணத் தில் ''எளிதில் முற்றுற'' என்பதைத் தவறாக ''எழுதில் முற்றுற'' என்று படிக்கிறார்கள். 'எளி தில்' என்பது இலகுவாக நிறைவேற விநாயகனைப் பணிவோம் என்பதேயாகும். 'எழுதில்' என்பது எழுதினால் என்ற கருத்தையே கொடுக்கும். எனவே ''எளிதில் முற்றுற'' எனப்பாடலே சரியான தாகும்.

மேலும் திருவாசகத்தில் 'கடையவனேனை' எனும் பதம் கடையவன் + ஏனை அதாவது கடை யவனாகிய என்னை என்னும் கருத்துடையது. இப் பதங்களைத் தவறாக — ''கடையவனே, எனைக் கருணையினால் கலந்து ஆண்டு கொண்ட விடை யவனே'' எனப் பாடுகிறார்கள். இதன்படி பார்க் கின் இறைவனையே, கடையவன் என அழைப்பது போன்றல்லோ பொருள் தருகிறது. எனவே ''கடை யவனைக் கருணையினால் கலந்து ஆண்டு கொண்ட விடையவனே'' எனப்பாடுதலே சரியானதாகும்.

திருப்புகழில் ''சூரனை வதைத்த முகமொன்றே'' என்பதைத் தவறாக ''சூரரை வதைத்த முக மொன்றே'' எனப்பாடுகிறார்கள். சூரன் ஒருவனே யல்லாமல் சூரன் என்ற பெயரில் பலர் முருகனோடு போர் புரியவில்லை. சூரன் எனப்படுவது தனி ஒரு வனின் பெயரே அவன் தம்பிமார் பெயர்கள்—

தாரக + அசுரன் — தாரகாசுரன்.
சிங்கமுக + அசுரன் — சிங்கமுகாசுரன் என்றே

கொள்ள வேண்டியதாகும். எனவே சூரன் எனும் ஒருவனை வதைத்ததையே- ''சூரனை வதைத்த முகமொன்றே'' எனப்பாடப்பட்டது. எனவே ''சூரனை வதைத்த எனப்பாடுவதே சரியானதாகும்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் வெற்றிபெற

— ரா. ராஜேஸ்வரக் குருக்கள் —

ராவண சம்ஹாரம் முடிந்து முன்பே வாக்குக் கொடுத்தபடி பரத்வாஜ ஆசிரமத்தில் தசரத மைந்தன் ஸ்ரீ ராமபிரான் தங்கினான். அப்போது ஸ்ரீராமனின் வீரத்தினைப்போற்றி புகழ்ந்தார் பரத்வாஜர். அதைக்கேட்ட கோதண்டராமன் வெட்கத்தால் தலை குனிந்து நின்றான். அதைக்கண்டு வியந்த பரத்வாஜர் 'ரகுராமா' வீரத்தின் விளை நிலமான நீயா வெட்கத்தோடு நிற்கிறாய்? என்று கேட்க பரத்வாஜரின் பாதங்களைப் பணிந்த ஸ்ரீ ராமபிரான்.

'ஸ்வாமி' என்புஜ பலபராக்கிரமத்தைப் பற்றி இத்தனை நேரம் கூறினீர்கள். என்னை பெரிய வீரன் என்றீர்கள் ராவணனை சம்ஹாரம் செய்தீர்கள் என்றீர்கள் தாடகையை அழித்தேன் என்றீர்கள் சிவதனுசை முறித்தேன் என்றீர்கள். ஆனால் இதையெல்லாம் நானா செய்தேன். இல்லவே இல்லை. இவற்றுக்கெல்லாம் நீங்கள் அனைவரும் அளித்த ஆசிகள்தான் காரணம்.

சிறுவயதில் இருந்தே அதிகாலையில் தாய் தந்தைக்கு நமஸ்காரம் செய்வேன். அவர்கள் நீ ஷேமமாக, திடகாத்திரமாக நீண்ட ஆயுளுடன் வாழ்வாயாக என்று வாழ்த்தி ஆசீர்வதிப்பார்கள்.

குலகுரு வசிஷ்டரின் பாதம் பணியும் பொழுதெல்லாம் 'பராக்கிரமசாலியாக ,பண்பட்டு பல சாதனைகள் புரிவாயாக' என்று வாழ்த்துவார்.

அரண்மனைக்கு அடிக்கடி வரும் மஹரிசி விஸ்வாமித்திரரை நாடி அவர் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்கும் பொழுதெல்லாம் ராமா யாராலும் வெல்லமுடியாத வீரனாவாயாக என்று அனுக்ரஹிப்பார்.

இராவணனை வதம் செய்ய இங்கிருந்து இலங்கை செல்லுமுன், தாங்கள் நமஸ்கரித்த என்னைப் பார்த்து செல்லும் காரியம் வெற்றி பெறட்டும் என்று வாழ்த்தி வழி அனுப்பினீர்கள்.

'இந்த ஆசீர்வாதங்கள்தான் எனது வெற்றிகளான நீங்கள் கூறும் அனைத்திற்கும் காரணமே தவிர நான் எதுவும் செய்யவில்லை! என்று அடக்கத்துடன் பதிலளித்தான் ஸ்ரீராமன்.

பகவானே இப்படிக் கூறினான் என்றால் மகான்கள், ஆசார்யபுருஷர்கள், பெரியோர்களின் ஆசீர்வாதங்களுக்கு மிஞ்சியது எதுவும் உண்டா?

ஆகவே நாமும் பெரியோர்கள் ஆசிபெற்று வாழ்க்கையில் வெற்றிபெறுவோமாக!

---

(5ம் பக்கத்தொடர்ச்சி)

**மணிவாசகனார்......**

இவ்வாறாக இன்னும் பல பாடல்களில் சொற்பிழைகள் விட்டுப் பாடுகிறார்கள். பொருள் விளங்காமையினால் விடும் இப்பிழைகளை சைவப்பேரறிஞர்கள் அவதானித்து திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் நடாத்தும் இச்சஞ்சிகையின் மூலம் நம்மக்களுக்குச் சரியானதைச் சொல்லிக் கொடுக்கும் பாக்கியத்தைப் பெறவேண்டுமென பணிவுடன் வேண்டுகிறேன். அத்தோடு ''சொல்லிய பாட்டின் பொருளறிந்து சொல்லுவோர்களை இனங்கண்டு அவர்களது போதனைகளை 'சிவநெறி' மூலம் வெளிக்கொணருங்கள் என சஞ்சிகைக் குழுவினரைப் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1624 இல் கோணேஸ்வரம்

திரு. க. இராசரெத்தினம், ஆரையம்பதி

இலங்கையிலுள்ள புராதன சிவஸ்தலங்களுள் ஒன்று திருக்கோணேஸ்வரம். இத்தலம் புராண இதிகாச சரித்திர வரலாறுகளைக் கொண்டது. இத்தலம் திருக்கோண மலையின் கிழக்கே கடலினூடாக உள்ள முக்கோணமலையில் அமைந்துள்ளது.ஆதிகாலத்திலே இந்த மலையில் கோரக்கர் என்னும் முனிவர் தவமிருந்து மறைந்த இடமாக கருதப்படுகிறது. அநாதியான கோணேஸ்வர ஆலயம் மூவாயிரம் வருடங்களுக்கு முன் ஏற்பட்ட கடற்கோளில் நீரில் அமிழ்ந்து விட்டது. பின்னே வந்த அரசர்கள் அந்த மலையின் உச்சியிலும், சரிவிலும், அடிவாரத்திலும் மூன்று கோயில்களைக் கட்டி ஆராதித்து வந்தனர். சில காலத்தில் இக் கோவிலை குளக்கோட்டன் என்னும் மன்னன் புனருத்தாரணம் செய்தான். கோவில் பூசைகளுக்காக தமிழ் நாட்டிலிருந்து லிங்கதாரர்களான சங்கமர்களை வருவித்து கோயில் பூசகர்களாக நியமித்தான். பிற்காலத்தே இச் சங்கமர்கள் அருகிப் போக பாசுபதர் கோயில் பூசகர்களானார்கள். இவ்வாலயத்தின் சிறப்பியல்புகளை அறிந்த கயவாகு மன்னன் இக்கோவில்களை அழித்து செல்வங்களை திருடும் நோக்கோடு கோணேஸ்வரத்தை நோக்கி வரலானான். இதனை அறிந்த பாசுபதர் பயத்தின் காரணமாகக் கடலில் குதித்து இறந்து போனார்கள்.

" காலமத றிந்து சோதிட ருரைக்க
காலமே கயவாகு ராசனும் வரவக்
காலமதனிற் பாசுபத ரிறக்க "
.................................(கோணேசர் கல்வெட்டு - அகவல்)

"கரிபரி வையஞ் சேனை கடலெனச் சூழ மன்னன்
வருதலை அறிந்து வேத மறையவ ரெல்லாங் கண்டு
வெருவியங் கெமக்குத் தீது விளைவதென்னோ வென்றஞ்சி
குரைகடல் தன்னிலோடிக் குதித்தன ராவி நீந்தார்"
(திரிகோணாசலபுராணம் - கயவாகுப் படலம் - 25)

இவர்கள் இறக்க கோயில் பூசை சீர்குலைந்தது .இதனை எவ்வாறோ சிதம்பரத்திலுள்ள பிரதம குருக்கள் அறிந்து கொண்டார். அவர் அங்கிருந்து சாம்பசிவம் என்னும் பெயருடைய ஒரு குருக்களை கோணேஸ்வரத்திற்குக் குருக்களாக நியமித்து அனுப்பி வைத்தார். சாம்பசிவக் குருக்கள் ராஜபுத்தானத்திற்கு மன்னர் வழித்தோன்றலாகும். இவர் தனது இளமைப் பருவத்திலே காதலில் தோல்வி கண்டு பூணூல் தரித்து காசிக்குச் சென்று மூன்று வருடங்கள் வேதாகமங்களை நன்கு கற்று வந்த ஒரு சிறந்த குருக்களாவர். பின்னர் சிதம்பரத்திலே எட்டு ஆண்டுகள் வாழ்ந்தவர்.

இவர் கோணேஸ்வரம் வந்த பொழுது அங்கு மூன்று கோவில்கள் இருந்தன. மலையுச்சியில் இருந்த கோவில் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த அழகான ஆலயமாக இருந்தது. இதனை போர்த்துக்கீசர் சாசனம் உறுதிப்படுத்துகின்றது. இவருக்கு உதவிக் குருக்களாக லக்சுமண ஐயர் என்பவர் ஒருவர் இருந்தார். பொன்னு பண்டாரம், ரெங்கையா, இருளப்பன் ஆகியோர் கோவிலில் வேலைக்காரர்களாக இருந்தார்கள்.

இவ்வாலயம் இரு பிரிவுகளாக அமைந்திருந்தது. கற்பக் கிருகம் ஒரு பகுதியாகவும், பெரிய மண்டபம் ஒரு பகுதியாக வும் அமைந்திருந்தன. இவைகள் கருங்கல் கதவுகளால் பிரிக்கப்பட்டிருந்தன.

மண்டபம் ஆயிரம் தூண்களைக் கொண்டதாக இருந்தது. மண்டபத்தின் இருமருங்கிலும் ஆயிரம் தூக்கு விளக்குகள் தொங்க விடப்பட்டிருந்தன.(ஆறு) விளக்குகள் ஒரு மனித உயரம் அளவில் வலம் இடமாக இருந்தன. விளள்குகள் பதினொரு திரி இடக்கூடிய தகழிகளாக இருந்தன. இவைகளுக்குச் சில அடி தூரத்தில் நடுவில் ஒரு மிகவும் உயரமான விளக்கொன்று இருந்தது. இது இருபத்திரண்டு திரி இடக்கூடிய தகழியை உடையது. தங்கமயமானது தாமரை மொட்டுப் போலும் நுனியை உடையது. இதனுச்சியில் ஒளிகாலும் இரத்தினக்கல் பதிக்கப்பெற்றிருந்தது. இந்த விளக்கு கஜபாகு மன்னனால் வழங்கப் பெற்றதாக அறிகின்றோம். கதவுகள் கருங்கல் தூண்களில் பொருத்தப் பெற்றிருந்தன. தூண்களிலும், கதவுகளிலும், சுவர்களிலும் யாழி, அன்னம், நாகம், பூக்கள், தோரணங்கள் சித்தரிக்கப் பெற்றிருந்தன. மண்டபத்தின் முன்னுக்கு நீண்ட முகப்பொன்று இருந்தது. இது நிருத்த மண்டபம் ஆகும்.பூசை நேரங்களில் அவ்வாலயம் ஒளிமயமாகத் தோற்றமளிக்கும்.

இந்த ஆலயத்தில் தினமும் மூன்று காலப் பூசைகள் நடந்து வந்தன. பூசை ஆரம்பமாவதற்கு முன்னர் ஒன்பது நடனப் பெண்கள் நிருத்த மண்டபத்திலீ இரு அணிகளாக நின்று நடனமாடுவர். நடனம் ஒரு சில நேரம் நடக்கும். நடனம் முடிந்ததும் மேளம், மத்தளம், இயம்ப குழலிசை மீதூத சங்கொலி ஒலிக்க மணிகள் இன்னிசையெழுப்ப பூசைகள் நடைபெறும். பூசகர்கள் பூணூல் தரித்தவர்களாக மேலங்கியின்றி வெள்ளாடை அணிந்து பயபக்தியோடு பூசை செய்வர். மூலஸ்தானத்தில் சாம்பசிவக்குருக்கள் பூசை செய்வார். பூசை முடிந்ததும் விபூதி , திர்த்தம், சந்தனம் முதலியன வழங்கப்படும். அப்புறம் மூலஸ்தான விளக்கு ஒன்று தவிர்ந்த ஏனைய விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டு விட்டு கோவில் பூட்டப்படும். பின்பு குருக்கள்மார் தங்கள் இல்லம் சென்றுவிடுவர்.

இக்கோவிலுக்கு ஐந்து பிரகாரங்கள் இருந்தன. முதலிரண்டு பிரகாரங்களும் மதில்களாகப் பிரிக்கப்பெற்றிருந்தன. மூன்றாவது பிரகாரத்தில் குருக்கள்மாரின் இல்லங்கள் இருந்தன.ஆலயம் நன்கு தெரியுமாறு குருக்களின் இல்லம் அமைந்திருந்தது. நான்காவது பிரகாரத்தில் பண்டாரங்களுக்கும் கோயில் தொழும்பு செய்வோருக்கும் வீடுகள் இருந்தன. யாத்திரை வருவோர்க்கு தங்குவதற்கும் இங்கு மடங்கள் இருந்தன.ஐந்தாம் பிரகாரத்திலே பெருந்தெருவும் இசையாளர்கள் நாட்டியப் பெண்கள் வாழும் இடங்கள் இருந்தன. தற்பொழுது கப்பல்கள் செல்லும் கரைப்பகுதியை அண்மித்ததாக பெருந்தெரு இருந்ததென குறிக்கப்படுகின்றது.

ஐந்தாம் பிரகாரத்தில் தென் மேற்கெல்லையில் தீர்த்தச்சுனை இதனை பாபநாசம் தீர்த்தமென அழைப்பர்.புனித மகாவலி கங்கையின் ஊற்று இங்கே சுரந்து கொண்டு இருப்பதாக சொல்லப்படுகின்றது. இந்த சுனையின் நான்கு புறமும்இரண்டடி உயரமளவில் சுவர் கட்டப் பட்டிருந்தது.இதன் நீளம் 24'அடியாகும் அகலம் 17' அடியாகும். இங்கே இரண்டு துலாக்கள் இருந்தன. இச்சுனைக்கு பல இடங்களிலிருந்தும் பலதரப்பட்ட மக்கள் வந்து ஸ்நானம் செய்து தங்கள் பாவங்களைத் தீர்த்துக் கொள்வர்.

மூலஸ்தானத்திலே பொன்னாலான சிவன், பார்வதி ஆகியோரின் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன. அவைகள் தினமும் பூமாலைகளால் அலங்கரிக்கப்பெற்று இருக்கும்.சுவாமியின் பீடத்துக்கு இருமருங்கிலும் சுரங்க வாயில்கள் கருங்கல்லால் மூடப்பட்டிருந்தன. சுரங்கவழியால் சென்றால் மலையின் கீழ் அநேக குகைகள் இருக்கக் காணலாம். அவைகளில் இக்கோயிலின் திரவியங்களும் ஏனைய பொருட்களும் சேமித்து வைக்கப்பெற்றிருந்ததாக அறிகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேஸ்வரத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் பெரும்பாலும் சைவசமயத்தவர்களாக இருந்தார்கள் .இந்த நகரத்தை தனியுண்ணாப் பூபாலன் என்னும் அரசபிரதானி ஆட்சி செய்து வந்தான். இவனுக்கு மரண தண்டனை விதிக்கும் அளவிற்கு அதிகாரம் இருந்தது. எனினும் இவன் கண்டியரசனின் கட்டளைக்கு உட்பட்டவனாக இருந்தான்.

இந்த நகரம் ஒரு துறைமுகத்தைக் கொண்டதாக அமைந்திருந்தது.ஆனதினால் தரைமார்க்கமாக மட்டு மல்லாது கடல் மார்க்கமாகவும் மக்கள் போக்கு வரவு செய்யக் கூடியதாக இருந்தது.

இக்கால கட்டத்திலே போர்த்துக்கேய பறங்கியர் ஆட்சி மேற்கு இந்தியாவிலுள்ள கோவா எனும் நாட்டிலிருந்தது.இவர்கள் கோணேஸ்வரத்தின் சிறப்பையும் அங்குள்ள செல்வங்களையும் அறிந்தார்கள். மேலும் அங்கே ஆலயத்தின் வருங்கால நிலை பற்றிக் கூறும் கல்வெட்டு ஒன்று இருப்பதையும் தெரிந்து கொண்டார்கள். பறங்கியரின் ஆட்சிக்காலம் பற்றி அச் சாசனத்தில் கூறப்பட்டதாகவும் தெரிந்து கொண்டார்கள். இவர்கள் அச்சாசனத்தையும் அங்குள்ள செல்வங்களையும் கைப்பற்ற முனைந்தார்கள். இதற்காக முதலில் இரண்டு உளவாளிகளை கோணேஸ்வரத்திற்கு அனுப்பி வைத்தார்கள். இவர்களின் பெயர் நிக்கோடமஸ், ஜெக்கோலின் ஆகும். நிக்கோடமஸ் ஒரு இந்தியர் கிறிஸ்தவன். இவனின் பெயர் தெய்வன் என்பதாகும். ஜக்கோலின் பாதிரியார் மேனன் என்னும் மலையாள வியாபாரியாவார்.இவர்கள் இந்து சமய கலாச்சாரங்களை நன்கு படித்து அறிந்தவர்களாவர்.

இவர்களும் மேலும் சிலரும் கோணேஸ்வரத்திற்குக் கடல் மார்க்கமாக வந்தனர். வரும் வழியில் இவர்களுக்குள் ஏதோ ஒரு தகராறு ஏற்பட்டு ஒருவருக்கொருவர் பகைவர்களானார்கள். இவர்கள் வந்த கப்பல் காளி கோவிலுக்கு நேராக ஒரு கற்பாறையில் மோதுண்டு சிதைந்து விட்டது. இருவரும் கடலிலே தத்தளித்து தரையை அடைந்தனர்.

நிக்கடமஸ் என்பவன் தந்திரோபாயத்தால் இருளப்பன் என்னும் பெயரில் கோணேஸ்வரர் கோவிலில் காவலாளியாகப் பணிபுரிந்தான்.ஜக்கோலின் என்னும் பாதிரியார் ஒரு முனிபோல தலையிலே சடையணிந்தும் கையிலே ஒரு வளை தடியுடனும் காவியுடுத்திக் கொண்டு நடமாடினார். இவர் தனது பெயரை பாக்கிய முனி என மாற்றிக் கொண்டார். இவர் அடிக்கடி ஆலயத்திற்கு வருவார். தேர் வைத்திருக்கும் கொட்டகையில் அமர்ந்து கொள்வார். கோவில் நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்துக்கொள்வார். கோவிலுக்கு வருவோர் போவோருடன் கோயிலிலுள்ள செல்வங்களையும் அவைகள் இருக்கும் இடங்களையும் விசாரித்துக் கொள்வார். அரச அதிகாரி தனியுண்ணாப்பூபாலனுடன் நன்கு சிநேகமாகிக் கொண்டான்.

பாக்கியமுனி சாம்பசிவக் குருக்களிடம் கோவில் நிதிகள் இருக்கின்ற இடங்களையும் கோவில் கல்வெட்டு இருக்கின்ற இடங்களையும் விசாரித்தார்.குருக்கள் இவைகள் பற்றிய தகவல் எதனையும் பாக்கிய முனிக்கு கூறவில்லை.இதன் காரணமாக பாக்கிய முனி குருக்களுடன் வெறுப்படைந்தார்.

பாக்கியமுனி இருளப்பனை பயமுறுத்தி அவனை தனது ஆணைக்குள் வைத்திருந்தார்.பொன்னு பண்டாரத்தின் உதவியுடன் மூலஸ்தானத்தில் இருந்த குருக்களின் மகன் காமினியின் சாதக ஏட்டை களவாடிக் கொண்டார். இந்த ஏடு கோவிலின் கல்வெட்டு என நினைத்துக் கொண்டான்.அதனை தனிமையில் இருந்து வாசித்த பின்பு இது ஒரு சாதகக் குறிப்பு என அறிந்து கொண்டார்.அந்தச் சாதக ஏட்டில் தனக்குச் சாதகமாக வரக்கூடிய செய்தி ஒன்றை செருகி விட்டார். பின் அந்த ஏட்டை கோவிலில் வீசி விட்டார்.

பாக்கியமுனி நகருக்கு வந்த நாள் முதல் நகரில் காய்ச்சல், பேதி, அம்மை நோய்களும் மக்களிடையே துன்பம் துயரங்களும் அதிகரிக்கலாயின.பாக்கிய முனியின் ஊசலாட்டத்தில் சனங்கள் சந்தேகப்பட்டார்கள். தெருக்களிலும் வீடுகளிலும் இவரைப் பற்றிய பேச்சே இருந்தன. இதனை முனியும் அறிந்து கொண்டார்.

ஒருநாள் முனி பூபால வன்னியனிடம் சென்று இந்த நகரில் நடைபெறும் துன்பம் துயரங்கள் நோய் பிணிகளை நர பலி யினால்தான் மாற்ற முடியும் என ஆலோசனை கூறினார்.பூபால வன்னிமை முதலில் இதனை ஏற்கவில்லை. மீண்டும் மீண்டும் நரபலியை முனி வற்புறுத்தி வாதிட்டதால் பூபால வன்னிமையும் அரச பிரதானிகளும் ஏற்றுக் கொண்டார்கள்.

பூபால வன்னிமை பிரதம குருக்கள் சாம்பசிவத்தை தனது சபைக்கு அழைத்தார். முனியின் ஆலோசனையை குருக்கள் தான் அறிந்தளவில் இந்நகரில் நரபலி நடைபெறவில்லை என்றும் சிவனடியார்கள் இதனை மேற்கொள்ள மாட்டார்கள் எனவும் மறுத்துரைத்தார்.முனி அவருடன் எதிர்வாதம் செய்தார். புருஷமேத்த யாகத்தில் நரபலி இடப்படுகிறது எனவும் புராணங்களிலே சண்டிகாதேவிக்கு நரபலி இடப்படுகிறது எனவும் வாதிட்டார். சாம்பசிவக் குருக்களைப் பார்த்து " உமது மகன் காமினி, மக்களின் நன்மைக்காக, 19வது வயதில் பலியிடப்பட வேண்டியவளாக இருக்கின்றாள். இதனை மறைப்பதற்காக இப்படியெல்லாம் பேசுகிறீர் " எனச் சினந்து சொன்னார். குருக்கள் காமினியின் சாதக ஏட்டை முனியிடம் கொடுத்து அப்படியேதும் இருக்கிறதா எனக் கேட்க முனி ஏட்டை வாங்கிப் பிரித்து ஒரு பக்கத்தைக் காட்டினார். முனி சொன்னது அப்படியே அந்த ஏட்டில் இருந்தது. குருக்கள் கோபம் கொண்டார். முனியைப் பார்த்து இந்த ஏட்டை நீ களவாடி வைத்திருந்த போது இந்த வசனங்கள் செருகப்பட்டிருந்தன என ஆவேசமாக சொன்னார். முனி அரச பிரதானிகளை நோக்கி காமினி பலியிடப்படாது போனால் நகரில் நோய் துன்பம் பிணிகள் நீங்காது. ஆனால் கடல் மார்க்கமாக படையினர் வருகின்றார்கள். கோயிலையும் நகரையும் அழித்து விடுவார்கள் என உக்கிரமமாக அதட்டிச் சொன்னார். பூபால வன்னிமை முனி கேட்டுக்கொண்டதற்கு இணங்க காமினியை தேரோட்டத்தன்று பலியிடுமாறு கட்டளை பிறப்பித்தார்.

சாம்பசிவக் குருக்கள் அதி சோகத்துடன் வீடு திரும்பினார். தனது வீட்டாரையும் லக்சுமண ஐயரையும் இருளப்பன், பொன்னு பண்டாரம், ரெங்கையா, ஆகியோரையும் அழைத்து அரச கட்டளையை விபரித்துக் கூறினார். அவர்கள் ஒன்று கூடி தாங்கள் தப்பித்துக் கொள்வதற்கு ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டனர். இன்றிலிருந்து மூன்றாவது நாள் தேரோட்ட நாளாகும். அது சித்திரை வருடப்பிறப்பு தினமும் ஆகும்.

இந்துக்களின் சித்திரை வருடப்பிறப்பு தினமான 1624 ஏப்ரல் மாதம் 13ம். தேதி தேரோட்டத் தினமாகும்.அன்றைய தினம் நகர மக்கள் விதம் விதமான ஆடைகளை அணிந்தவர்களாய் தேர்த் திருவிழாவுக்கு வந்தனர் சனக்கூட்டம் அதிரித்தது.

தேர் பல சித்திர வேலைப்பாட்டுடையதாக பூக்களாலும் துணிகளாலும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. நான்கு புறமும் யாழிகள் பூட்டப்பட்டிருந்தன.

மூலஸ்தானத்தில் பூசைகள் நடந்ததும் சிவன் பார்வதி சமேதராக மயில்வாகனத்தில் எடுத்து வரப்பெற்று தேரிலே வைக்கப்பட்டது. தேரிலே உரிய பூசைகள் நடந்த பின் தேரோட்டம் ஆரம்பமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனது தொடைப்பருமனளவு வடம் பூட்டப்பட்டு தொண்டர்களும் தொழும்பர்களும் ஏனையவர்களும் வடம் பிடித்து இழுத்தனர். உடம்பெல்லாம் வேல்பாய்ச்சிய ஆடவர்கள் காவடியாட்டம், கரகாட்டங்கள் ஆடினர். மேள வாத்தியங்களும் குழலிசை சங்கொலி இயம்பின. தேர் வீதி வலம் வந்து கொண்டிருந்தது.

இவ்வாறு தேர் நகர்ந்து கொண்டிருக்கும் பொழுது தனியுண்ணாப் பூபாலனும் பாக்கியமுனியும் காலாட் படையுடன் வந்து தேரை நிறுத்தினர். குருக்களை தேரினின்று கீழே இறக்கி பலியிடுவது எப்போது என அதட்டினர். தேர்த் திருவிழா முடிந்த பின்பே பலியிடுதல் இடம் பெறும் என குருக்கள் சொன்னார். அப்புறம் தேர் மெல்ல மெல்ல வீதி வலம் வந்து கோயில் முகப்பின் முன் வந்து நின்றது. பாததீர்த்தம் பாத சேவை முடிந்த பின்பு சுவாமியை மூலஸ்தானத்திற்கு எழுந்தருளச் செய்து அங்கு வேண்டிய பூசைகளும் நடந்து முடிந்தது. குருக்கள் ஒரு பூமாலையுடன் வெளியே வந்தார். பலியிடுவதற்கு உரியவளான காமினியை விட்டு அவளின் சகோதரி சகுணம் கொண்டுவரப்பட்டாள். அவளை நிலபாவாடையிலே மலர் தூவி வாழ்த்திக் கொண்டு வந்தனர்.

ஒரு மரத்தடிக்குச் சென்றனர். அங்கே சண்டிகா தேவிக்கு பலியிட வேண்டிய ஆயத்தங்கள் செய்யப் பெற்றிருந்தன.
பலியிடுவது யாரென குருக்கள் கேள்வியெழுப்பினார். குருக்களே பலியிடவேண்டுமென பிரதானி கூறினான். குருக்கள் கொலை செய்வதில்லை முனியே அந்தப்பணியைச் செய்ய வேண்டும் என உரக்கக் கூறிக் கொண்டு கையிலிருந்த மாலையை பாக்கிய முனியின் கழுத்தில் வீசினார். மாலை வீசப்பட்டதுதான் தாமதம் இருளப்பன் பொன்னு பண்டாரம் முனியைப் பிடித்து அடித்தனர் துன்புறுத்தினர். முனியின் பொய்ச்சடை நீங்கிற்று. மொட்டைத்தலையரானார். சட்டைகள் கிழித்தெறியப்பட்டன. அவர் கழுத்தில் அணிந்திருந்த சிலுவை வெளிப்பட்டது. முனியின் கபட நாடகம் அம்பலமாயிற்று முனியை உளவாளி ஒற்றன் துரோகி என நகர மக்கள் தூற்றினர். அவர் யக்கோலின் பாதிரியாராகக் காட்சியளித்தார். இதே சமயம் பறங்கிப் படை கடலில் வந்து இறங்கிற்று. பறங்கிப் படைக்கு கொன்ஸ்ரான் டி சா தலைமை தாங்கி வந்தான். கோயிலுள் புகுந்தான். யக்கோலின் பாதிரியாரை விடுவித்தான்.

டிசா குருக்களிடம் சென்று கோயிலின் கல்வெட்டு திரவியங்கள் எல்லாம் இருக்கும் இடத்தை காட்டும்படி கேட்டான். குருக்கள் அப்படி எதுவும் இல்லை எனக்கூற அவர் மேல் சினந்து விழுந்தான். கோயிலைத் தரைமட்டமாக்கும்படி படையின ருக்கு உத்தரவிட்டான். படையினர் மண்டபத்தை உடைக்கத் தொடங்கினர். நகர மக்கள் பறங்கிப்படையை கல்லாலும், பொல்லாலும் தாக்கிப் போரிட்டனர். பறங்கியர் முறையாகப் போர் செய்யப் பழகியவர்கள் ஆனதால் அவர்கள் திறமையாகப் போர்செய்து நகர மக்களை கொன்றும் காயம் அடையவும் செய்தனர். இந்த வேளை குருக்கள் மூலஸ்தானத்தில் நின்று கொண்டிருந்தார். டிசா குருக்களிடம் சென்று திரும்பவும் கோயில் கல்வெட்டு திரவியங்கள் இருக்குமிடத்தை காண்பிக்குமாறு வற்புறுத்தினான். இன்றேல் மூலஸ்தானத் தையும் உடைக்கப்போவதாக கர்ச்சித்தான். குருக்கள் ஒரு கல்லை காலால் உதைத்துக் காட்டி இதுதான் கல்வெட்டு என்று சொல்லிவிட்டு மூலஸ்தானத்தின் உட்புறமாகச் சென்று கதவுகளை மூடி உள்ளே தாழிட்டு விட்டார். அங்கிருந்த சிவன் விக்கிரகங்களையும் இன்னுஞ் சில தேவையான பொருட்களையும் எடுத்துக் கொண்டு சுரங்க வழியால் கீழே இறங்கி கிழக்குப்புறப்பக்கம் வந்து சேர்ந்தார். பலிப்பெண் சுகுணத்தையும் ரெங்கையா எப்படியோ கொண்டு வந்து சேர்த்துவிட்டார். முன்னமே செய்துகொண்ட ஒழுங்கின் பிரகாரம் கடலினுள்ளே காணப்படும் சிறுபஸ் வண்டி போன்ற கல்லின் அருகில் கொட்டியாரத்து வத்தைகள் ஆயத்தமாகி நின்றன கொண்டிருந்தது.

அதிலே விக்கிரகங்களையும் தேவையான பொருள்களையும் ஏற்றிக்கொண்டு குருக்களின் குடும்பம் அனைவரும் அதில் ஏறிக் கொண்டார்கள். இது இரவு நேரம் குருக்கள் லக்சுமண ஐயரின் உதவியுடன் மலையடிவாரத்தில் சுரங்கத்தை மூடக்கூடிய கடல் நீர்ற் தடுப்புப்பாறை ஒன்றை கீழே தள்ளி விட்டு உடனடியாக வத்தையில் ஏறி தம்பலகாமம் சென்றனர். கடல் நீர் தடுப்புப்பாறை நீங்க நீர் பெருக்கெடுத்து 14 அடி உயரமளவில் மேலெழுந்தது. கடலும் மலையும் ஒன்றாகிற்று. கோயிலில் நின்ற மக்கள் சிலர் இறந்தனர். பலர் காயமடைந்தனர். சிலர் ஓடி மறைந்தனர். சிலர் தங்கள் கைக்கு எட்டிய விக்கிரகங்கள் விளக்குகள் முதலானவைகளை நகருக்குள் கொண்டு சென்றனர். விக்கிரகங்கள் விளக்குகளை நிலத்துள் மறைத்துவிட்டனர்.

டிசா கல்வெட்டை வாசிக்குமாறு யெக்குலின் பாதிரியாரைக் கேட்டான். அந்தக் கல்வெட்டு சமஸ்கிருத மொழியில் எழுதப்பெற்றிருந்தது.

## கல்வெட்டு :-

" என்னொருவன் தளர்வுறு செங்கோ லோச்சுகிறானோ அவனது செங்கோலாட்சி ஒரு குறித்த காலத்திற்கே. எந்த அரசன் சிம்மாசனத்தில் இருக்கிறானோ அவனது அரசு நீடித்திருக்காது. அவ்வாறு அரசோச்சுகிறவன் அரசை மற்றவர்களுக்கு கையளிக்க வேண்டும். சில காலத்திற்கு இலங்கையை பறங்கி ஆழ்வர் அதன் பின் நீதியான ஒல்லாந்தன் ஆழ்ந்து விட்டு சமுத்திரங்களுக்கு அப்பால் உள்ள பூனைக்கண்ணனுக்கு விட்டுக்கொடுப்பான். அவர்கள் நீண்ட நாள் அரசாண்டதன் பின்னர் நாட்டை இலங்கையருக்கு அளித்து வருவார்கள்.

He that sways the scepre shall sway it for a season.The Kingdom upon his throne shall sit there not "for ever" for a While the Parangi shall have rule over Lanka, after him from Holland shall come the men of Justice and we shall Yield the Kingdom to a people from afar, a cat eyed people coming from beyond the ocean. They shall reign the longest and shall then deliver to the Kings of Lanka the Kingdom of the Country.

இந்தக்கல்வெட்டு கிறிஸ்துக்கு பின் 1591ல், ஒரு ரிசியினால் கூறப்பெற்றதென நூலாசிரியர் ஒரு போர்த்துக்கீச சரித்திர நூலாசிரியர் வாயிலாக கூறுகிறார். வேறு சிலர் இது அகத்தியரால் தெரிவிக்கப்பட்டதெனச் சொல்லுகிறார்கள்.

கொன்ஸ்ரைன் டிசா கோவிலை இடிப்பித்தபொழுது போத்துக்கீச அரசுக்குப் பின்வருமாறு எழுதியிருப்பதாக போர்த்துக்கல் சென்று திரும்பிய கலாநிதி. பாலேந்திரா தனது திருக்கோண மலையில் பித்தளை உருவங்கள் (Trincomalee Bronzes) என்னும் நூலில் கூறுகின்றார்.
" When I went there to make this fort I found this written on the Pagoda among many other writings which were there"

" இந்தக் கோட்டையை நான் கட்டச் சென்றபோது அந்தக் கோயிலில் அநேக எழுத்துக்களைக் கண்டேன். அவைகளுள் ஒன்று தான் இது " இதன் பிரகாரம் பார்த்தால் கல்வெட்டுப் பாடல்கள் அதிகம் இருந்ததாக அறியமுடிகின்றது.
மூலஸ்தானம் தாழிட்டுப் பூட்டப்பட்டு சுரங்க வாயில் அடைபட்டதன் காரணத்தால் கோயிலின் செல்வங்கள் பறங்கியர் கைக்கு அகப்படவில்லை என அறிய முடிகின்றது. ஆனால் டாக்டர் பாலேந்திரா அவர்கள் மேற்கூறியவாறு தனது நூலில் அதுகாலவரையும் கோயிலில் சேமித்து வைக்கப்பெற்றிருந்த தங்கம், பித்தளை, செம்பு, பட்டு நகைகளெல்லாம் சில மணிநேரத்தில் பறங்கியரால் கொள்ளையடிக்கப்பட்டு விட்டதாக கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகள் மூலஸ்தானம் தவிர்ந்த ஏனைய இடங்களில் இருந்தவைகளாக இருக்கலாம். பறங்கியரின் இக்கொடூரச் செயலை இலங்கையில் அப்போதிருந்த கத்தோலிக்க குருமாரும் ஸ்தாபனங்களும் பறங்கியரை வெகுவாகக் கண்டித்தனர். குவைரோஸ் பாதிரியார் தனது Temple and Spiritual conquest of Ceylon" என்னும் நூலில் கண்ணீர் விட்டழுகின்றார்.

இருளப்பன் யெக்குலின் பாதிரியாரை(முனியை) ஒரு சுரங்கவழியாக அழைத்துச் சென்று சதிகாரா தொலைந்து போ என்று சொல்லி ஒரு குகைக்குள்ளே தள்ளிவிட்டான். அதன்பின் தான் ஓர் வேறு வழியால் தப்பித்துச் சென்று விட்டான்.

பறங்கிப் படையினர் கோயிலை தரைமட்டமாக்கிய பின்பு அங்கே ஒரு கோட்டையைக் கட்ட ஆரம்பித்தனர். அக்கோட்டையின் நுழைவாயில் நிலையில் கல்வெட்டொன்று உள்ள தூண் ஒன்றையும் வைத்துக் கட்டினார். கொன்ஸ்ரைன் டீசா போத்துக்கேயன் கட்டிய கோட்டைதான் இன்று காணப்படும் பெடரிக் கோட்டையாகும்.

நகரமக்கள் பலர் பறங்கிப்படைக்கு அஞ்சி யாழ்ப்பாணம், இந்தியா, ஆகிய இடங்களுக்குச் சென்று விட்டனர். நகரில் தங்கியிருந்தவர்களிடையே கிறிஸ்தவமதம் புகுத்தப்பட்டது. தனியுண்ணாப் பூபாலன் கூட கிறிஸ்தவ மதத்தை தழுவி முதலியாரானார். கிறிஸ்துமதம் தழுவிய தகுதியானவர்களை பறங்கியர் கணக்காளர்களாகவும் வரி அறவிடுவோராகவும் நியமனஞ் செய்தனர். குருக்கள் பண்டாரம் தொழும்பர்கள் வாழ்ந்த இல்லங்களில் கிறிஸ்தவர்களையும் பாதிரிமார்களையும் குடியேற்றினார்கள். பல மத பாடசாலைகளை உண்டாக்கினார் கள். மதஸ்தாபனங்களையும் தொடங்கி வைத்தார்கள்.

தம்பலகாமம் சென்ற குருக்களும் அவர்களின் குடும்பத்தினரும் அங்குள்ள சுவாமி மலையில் சிவன் பார்வதியை பிரதிஷ்டை செய்து பூசை செய்து வரலானார்கள்.

(இந்தக் கட்டுரை சுவாமி சாள்ஸ் போர்ட் என்பவரின் ஞாபகார்த்தமாக திரு. ஐசாக் தம்பையா என்பவரால் 1932ல், வெளியிட்ட ஆங்கில நாவல் "சாம்பசிவ காலத்திலே (" In the days of Sambasive " இருந்து தொகுக்கப் பெற்றதாகும்."

N.B : The fate of the temple inscribed in the temple slab were found fragmented into two pieces in the Fort Frederick, by an British Army in 1944 while digging a reservoiere.

# இந்துக் கிரியைகள்

செல்வி. மயூரதி அமிர்தலிங்கம்.

இந்துமதம் மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி சமைக்கும் முறையில் பல வழி முறைகளைக் கூறுகிறது. அவற்றுள் கிரியையும் ஒன்றாம். " கிரியை என மருவும் அவை யாவும் ஞானம் கிடைத்ததற்கு நிமித்தம் " என உமாபதி சிவாச் சாரியார் தனது நூலாகிய சிவப்பிரகாசத்தில் கூறுகின்றார். வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டிய வழியையும் பின் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் பூரணநிலையையும் மனிதனுக்குப் பெற்றுக் கொடுக்கும் சாதனமாக இந்துக் கிரியைகள் பணியாற்றுகின்றன. எனவே பூரணம் என்ற ஆன்மீக விடுதலையைப்பெற இந்துக்கிரியைகள் பெருமளவு துணைபுரிகின்றன. இத்தகைய நிலைப்பாட்டில் சமய, சமூக முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்குபவை இந்துக் கிரியைகள் கிரியை மரபில் தனித்துவமும் சிறப்பும் வாய்ந்தவை. இந்து சமஸ்காரங்கள் தொட்டில் தொடங்கிச் சுடுகாடு வரை ஒரு மனிதனின் வாழ்வில் நிகழும் முக்கிய நிகழ்ச்சிகளுக்குச் சமய முக்கியத்துவம் அளிக்கும். இவ்வினைமுறைகளுக்குச் 'சமஸ்காரங்கள்' அல்லது 'சுத்தி செய்யும் வினைமுறைகள்' என்பது பெயர். சமஸ்காரம் என்பது ஒரு சமூகசமயச் சடங்காகும். இதனைச் செய்வதன் மூலம் இந்து ஒருவனுடைய வாழ்க்கை தூயதாவதுடன் மட்டுமன்றி அவனது வாழ்க்கையை வளம்படுத்தும் அரியசாதனமாகவும் அமைகின்றது.

இத்தகைய சிறப்புடைய சமஸ்காரங்களிற்கு வேதாகமங்களே முன்னோடியாக அமைகின்றன. சமஸ்காரங்கள் பற்றி வேதாகமங்களில் காணப்படும் மூலவுண்மைகள் ஒன்றாயிருப்பினும், நடைமுறை விவகார விதிகளில் வேதங்களிலிருந்து சிவாகமம் சற்று வேறுபடும் . இக்கிரியைகளைக் கைக்கொள்ளுபவர்கள் சைவர், ஸ்மிருதியாளர், வைதிகர் என முத்திறப்படுவர். ஸ்மிருதியாளர்களும் வைதிகர்களும்வேதத்திலுள்ள அமைப்பின் படியே அவற்றைக் கைக் கொள்ளுவர். சமஸ்காரங்கள் பற்றி வேதத்திலுள்ளவற்றை நெறிப்படுத்திக் கூறும் பகுதிகள் போதாயண ஸமிருதி, ஆஸ்வாலாயன ஸ்மிருதி போன்ற ஸ்மிருதி நூல்களிலும், ஆகமங்களிலுள்ள கருத்துக்களை நெறிப்படுத்திக் கூறும் நூல்கள் பத்ததிகளாகும். அவற்றுள் சோமசம்புசிவாச்சாரியார் பத்ததி, அகோரசிவாச்சாரியார் பத்ததி ஆகிய இரண்டுமே தற்போது வழக்கில் உள்ளன.

இவ்வாறாக சமஸ்காரங்கள் நாற்பது என்று சிலரும் பதினாறு என்று சிலரும் கூறுவர். அவை எவ்வாறிருப்பினும், நாம் இவற்றில் மிகவும் இன்றியமையாத சமஸ்காரங்களான திருமணக் கிரியை பற்றியும் மரணக்கிரியை பற்றியும் சற்று விளக்கமாக நோக்கலாம்.

## திருமணக் கிரியை :-

சமஸ்காரங்களில் ஒரு முக்கிய கிரியையாக திகழ்வது விவாஹ உறவாகும். இதனை உத்வாஹம், கன்யாதானம், கலியாணம், பாணிக்கிரஹணம் என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது; விவாஹ உத்வாஹ என்ற இரண்டும் "சிறப்பாக வகிப்பது" என்று அர்த்தமுள்ளவை.தம்பதிகள் ஒன்றாகச் சேர்ந்து தர்மத்தை வகிப்பது. அதாவது கிருகஸ்ததர்மத்தை வகிப்பது என்று பொருள், வட்டையும் குடும்பத்தையும் வகிப்பது என்றும் பொருள். 'கலி' எனும் பதம் 'கேடு' எனவும் 'ஆணம்' என்னும் பதம் அன்பு எனவும் பொருள்படும். ஆகவே கலியாணம் என்னும் பதத்திற்கு கேட்டினையகற்றி அன்பினை விளைவிக்கும் அரியதோர் செயல் எனப் பொருள் கோடலாகும். அது எவ்வாறெனின், அந்தப் புண்ணியச் செயலானது பண்டைத்தீவினையின் பயனுய்யான் 'புத்' என்னும் புரைகிற் புற்கெழுந்தும் புருடரை அதனின்றும் அகற்றி அப்புறாடர் அன்பின் அருகாமையையறிந்து அதனை அனைத்து யரிடத்தும் அப்பியாசித்து அதனால் அன்புருவாய அத்தனது அருளையடைவதற்கு அருகராகுதற்குக் காரணமாகின்ற சற்புத்திரரைப் பெறுவதற்குச் சாதனமாதலாகும்.

இதனால் விவாஹமானது மிகவும் மேன்மையுள்ள நிலைமையதாயிருத்தலை அறிகின்றோம். ஆகையால் இதை அற்புதமாக எண்ணி, யோசனையில்லாமலும் புத்தி இல்லாத மிருகங்களைப் போலவும் கேவலம் தேக இச்சைகளை நிறைவேற்ற வேண்டும் என்று விவாகம் செய்யாமல், விவாகம் நியமிக்கப்பட்ட முகாந்திரங்களை எண்ணி பயபக்தியோடும் விவேகத்தோடும் தகுந்த யோசனைகளோடும் தெரிந்த புத்தியோடும் ஆண்டவனுக்கஞ்சி விவாஹம் செய்ய வேண்டும். தேவ, பிதிர் கடன் அகல விவாஹம் மிகமிக அவசியமானது. விசேஷமாக ஸ்திரீகளுக்கு விவாகம் முக்கிய சமஸ்காரமாகும். பெண்களுக்கு விவாகம் என்பது உபநயன ஸ்தானத்தில் விதிக்கப்பட்ட ஒரு சமஸ்காரம் என்கிறது சாஸ்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாஹக்கிரியையில் நிகழும் சில முக்கியமான சடங்குகளைப் பற்றி நோக்குவோமாயின். விவாகம் செய்துகொள்வதற்கு முன் நிகழ்வது சங்கற்பம். விக்ணேஸ்வர பூசை என்பன முதலில் பெண்ணின் தகப்பனார் விக்னேஸ்வர பூசை செய்து கொண்டு சங்கற்பம் செய்து, இருபத்தொரு தலைமுறைகளும் நற்பயனடைவதற்கான கன்னிகாதானத்தைத்தான் செய்யத் தொடங்கியிருக்கும் விபரங்களை சங்கற்பம் மூலம் நிறைவேற்றிக் கொள்ளுகின்றோம். மணமகளைப்பற்றியும் மணமகனைப்பற்றியும் உள்ள குலம் கோத்திரங்களைப் பற்றி விளக்கம் கொடுத்தல் வரப்பிரேஷணை எனப்படும். இந்த வரப் பிரேஷணையில் தெரிவித்தபடி கன்னியைக் கொள்ள வந்திருக்கும் மாப்பிள்ளையை சிவ அம்சமாகக் கருதி பெண்ணின் தகப்பனார் உபசரணைகள் செய்து பூஜிப்பதாக ஐதீகம். அதன்பின் வரப்பிரேஷணையை மூன்று முறை சொல்லி கன்னிகாதானம் என்னும் கிரியை நடைபெறும்

பெண்ணின் தகப்பனார் நெல்வைத்து வைக்கோலால் கட்டப்பட்ட மூட்டையின் மேல் உட்கார்ந்து கொண்டு தன்மடியில் பெண்ணை இருத்திக் கொள்வார். இவ்வாறு கிழக்கு நோக்கி உட்கார்ந்து கொண்ட பெண்ணின் தகப்பனார் தன்னைப்பார்த்து எதிரில் நின்றுக்கொண்டிருக்கும் மாப்பிள்ளையிடம் தன் பெண்ணைக் கன்னிகாதானம் செய்கிறார். பெண்ணின் கையில் தேங்காய் பழம், தஷணையுடன் பெண்ணின் தாயார் வடக்கு நோக்கியிருந்து தாரை வார்க்க மாப்பிள்ளை இக்கன்னிகாதானம் ஏற்றுக்கொள்வதாக விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இக்கிரியைகளில் நந்தி முகம் என்பது பிதிர் பூசையாகும் பிதிர்களை நினைவு கூர்ந்து அவர்கள் திருப்தியுறும் பொருட்டாகத்தானம் வழங்குதலும் இடம் பெறும். இதன்பின் திருமாங்கல்யத்தை லஷ்மியாக தியானம் செய்து பூசை செய்வதாகும் உடனே புதுப் புடவை மணப்பெண்ணுக்கு அளிக்கப்படுகிறது. இக்கூறை கொடுக்கும நிகழ்ச்சியை மந்திரவாசம் வழங்கல் என்று கூறுவர். முகூர்த்தப்புடவையைத் தரித்து வந்ததன் பின்புதிருமாங்கல்யதாரணம் நிகழும்.

திருமாங்கல்யம், புஷ்பம் முதலியவைகளை தாம்பளத்தில் வைத்து பெரியோர்களிடம் காட்டி அவர்கள் தொட்டு ஆசீர்வாதம் செய்வது வழக்கம். அதன்பின் மணப்பெண் கிழக்கு நோக்கி உட்கார மணமகன் மேற்கு நோக்கி இருந்து பெண்ணின் கழுத்தில் தாலியைத் சட்டுகிறான் பெண்ணின் கழுத்தில் தாலி சட்டும்போது மாப்பிள்ளை ஒரு முடிச்சும், மாப்பிள்ளையின் சகோதரி இரண்டு முடிச்சும் போடும் சம்பிரதாயம் வழக்கத்திலிருந்து வருவதாகும்.

இதன்பின் நிகழ்வது பாணிக்கிரஹணம் என்னும் பெண்ணின் கையைப் பிடிக்கும் நிகழ்ச்சியாகும். பெண்ணின் வலது கையிலுள்ள ஐந்து விரல்களையும் குவித்த முறையில் சேர்த்து மணமகன் பிடிக்கவேண்டும் என்பது விதியாகும். மாப்பிள்ளையின் கை மேலேயும் பெண்ணின் கை அதில் அடங்கியும் இருக்க வேண்டும். இப்பாணிக் கிரஹணம் நல்ல சற்புத்திரர்களைப் பெறுவதற்கும் அதனால் தேவர்களும் ரிஷிகளும் பிதிர்களும் சந்தோஷமடைவதற்கும் ஏதுவாக விளங்குகின்றதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

பெண்ணின் வலது காலை மாப்பிள்ளை இடது கையால் பிடித்து ஒவ்வொரு அடியாக ஏழடி தூக்கி வைத்தல் என்பதற்கு சப்தபதி என்று கூறப்பட்டிருக்கிறது "மழை முதலான காலநிலைகள் உதவுவதற்கும், தானியங்கள் அபிவிருத்திக்கும் விரதாதிகள் நடத்துவதற்கும், வியாதிகளின்றி வாழ்வதற்கும், பசு முதலானவைகள் உதவுவதற்கும், ருதுக்கள் அநுக்கிரகத்துக்கும், ஏழு ரிஷிகள் ஆசி ஏற்படுத்துவதற்கும் உதவுவதாக உன் வரவு இருக்கட்டும்" என்ற தத்துவத்தில் ஏழடி எடுத்து வைப்பதாகச் சொல்லப்படுகின்றது ஏழாவது அடி வைத்ததும் அம்மி மிதித்தல் இடம்பெறும் வாழ்க்கையில் வரும் எல்லாவிதத்தாக்கங்களையும் தாங்கும் திட்டநிலையைப் பெறுதல் அம்மி மிதித்தலில் அர்த்தமாகின்றது. அம்மி மிதித்தவுடன் சிவாக்கினியை வலம் வந்து இருவரும் கூப்பிய கைகளால் நெற்பொரி ஓமஞ் செய்வர். இது தொடர் நிகழ்ச்சியாக மூன்று முறை நிகழும். மாலை மாற்றுதல் மோதிரம் எடுத்தல், பால், பழம் அருந்துதல் போன்றனவும் நிகழும்

பின்னர் மணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு ஆசீர்வாதம் செய்தலாகும். பெரியோர்கள், வைதிகர்கள், மந்திரங்கள் மூலம் அட்சதை போட்டு வாழ்த்துவதே ஆசீர்வாதமாகும். இது முடிந்த பின்பு மணமக்களுக்கு ஹாராத்தி சுற்றிக் கொட்டுவார்கள். விவாகத்தின் பின் நான்காம் நாளிரவு துருவதரிசனம் (அருந்ததி) பார்த்தல் நிகழும். ஸ்ப்தரிசிகளின் பத்தினிகளுக்கு க்ருத்திகா என்று பெயர். அவர்களுள் சிறந்தவளான அருந்ததியை மற்ற ஏழு க்ருத்திகைகள், "இவளே எங்களில் மிக உத்தமி" என்று ஏற்றுக் கொண்டனர். அத்தகைய அருந்ததியின் தரிசனத்தால் இவள் எட்டாவது க்ருத்திகை போல் கற்பினாலும் பாக்கியத்தாலும் விருத்தியடையட்டும் என்பதே அருந்ததி பார்த்தல் என்பதின் தத்துவமாகும்.

பிறப்பு முதல் விவாஹம் வரையில் நடைபெறும் கிரியைகள் அதாவது உயிர் உடலோடு கூடி வாழும் நிலையில் அதன் நன்மை கருதிச் செய்யப்படும் கிரியைகள் பூர்வக்கிரியைகள் எனப்படும்.

## மரணக்கிரியை:-

இனி அபரக்கிரியைகளைப் பற்றி நோக்கின், எடுத்தவுடலை விட்டு உயிர் விலகிய பின் அதன் நன்மை குறித்துச் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரியைகள் எனப்படும். மரணத்திற்கு முந்திய நிலையில் நம் சேமநலங்களுக்கு சிறப்பாக உதவும் இந்திரன் வர்ணன் முதலிய தேவர்களைப் போல, மரணத்தின் பின் நமது சேமநலங்களுக்கு சிறப்பாக உதவும் பொருட்டாக இருப்பவர்கள் பிதிர்கள். இவர்களும் தேவர்களைப் போலவே தம்மைக்குறித்து நம்மாற் செய்யப்படும் கிரியைகளால் தாம் திருப்தியுற்ற பின்னரே தாம் கவனித்தற்குரிய சேமநலங்களைக் கவனிப்பவர்களாவர்கள். பொதுவாக நம் வாழ்வில் நமக்கு நிகழும் சேமலாபம் பேறுகள் எல்லாவற்றிலும் தேவர், பிதிரர்களின் பங்கு முக்கியமானது. அவர்களின் திருப்தி எங்கள் சேமலாபப் பேறுகளை நன்கமையச் செய்யும். அவர்களின் வெறுப்பு அவைகளைக் குறைக்கவும் கெடுக்கவும் பார்க்கும். மரணத்தின் பின் பிதிரர் சகாயம் பிரத்தியோகமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டப்படும் நிலையுண்டு இதனால் இல்வாழ்வார்க்கு தேவர்கடனும் பிதிர்க்கடனும் இன்றியமையாதனது.

நாமாக இறந்துவிட்டவருடன் எவ்வகையிலும் தொடர்புகொள்ளல் இயலாது. ஆகவே அதற்குரிய உத்தரவாதமுள்ளவர்களாகிய பிதிர்களை வருந்தியழைத்து நம்முன் இருத்தி அவர்களை நமது பூசை, தானம், தர்ப்பணம் என்பவற்றால் திருப்திப்படுத்தி. இறந்தோரின் சேமநலன் பொருட்டாக நாம் எவற்றையெல்லாம் செய்ய விரும்புகிறோமோ அவற்றையெல்லாம் அவர்களைக் கொண்டே செய்வித்தல் தான் அபரக்கிரியைகளின் பொதுநிலைப் பண்பாகும். பிரபஞ்ச வெளியில் தெற்குத் திசை பிதிரர்களுக்குரிய இடமாகக் கருதப்பட்டமையால் அவர்கள் தென்புலத்தார் எனப்பட்டனர்.

அபரக்கிரியையில் முதலாவதாக இடம் பெறுவது உத்கிராந்திக் கிரியையாகும். அதாவது தேகத்தை விட்டு உயிர் கிளம்புதல் சார்பாக அவ்விறுதிக் கட்டத்தில் செய்யப்படும் கிரியையாகும். உயிர் பிரிய இருக்குமொருவர் அகப்புறத் தூய்மையுள்ளவராயும், சிவத்தியானமுள்ளவராயும், தன்னால் இயலும் அளவு தான தருமம் செய்த திருப்தியுள்ளவராயும் இருக்க வேண்டும் என்பது விதியாகும். அடுத்து அந்திய காலத்தில் செய்யப்படும் கிரியையை அந்தியேஸ்டி என்பர். இக்கிரியை செய்யப்படுவதில் அவரவருடைய சமயாசார ஒழுக்கநிலை பிரதானம் பெறும். விசேஷ தீட்சை, நிர்வாண தீட்சை பெற்றவர்களிற்கு அவர் பிரேதத்தின் சார்பாக நடைபெற வேண்டும் கிரியைகள் அனைத்தும் ஒரே தொடர்பாக அவர் இறந்த அதே நாளில் நடந்து முடிந்து விடும் சமய தீட்சை மட்டும் உள்ளவர்கள் பொதுவாக சமயாசாத்தரம் குறைவாயிருப்பதால் அந்தியேட்டிக் கிரியையை இரு கூறாக்கி அன்று நடப்பது சவக்கிரியை என்றும், முப்பத்தோராம் நாள் நடப்பது அந்தியேட்டிக் கிரியை என்றும் கூறப்படும்,

ஒருவர் இறந்ததும் உடனடியாக நிகழ வேண்டுவது பிரேத சுத்தியாகும். அதாவது உயிர் தேகத்தை விட்டு நீங்கியதும் உடலை சுத்த ஜலத்தினால் ஸ்நானம் செய்து புது வஸ்திரத்தினால் மூடவேண்டும். இதன்பின் நிகழ்வது சூர்ணோற்சவம் எனப்படும் சுண்ணமிடித்தலாகும், இறந்த ஜீவனை நாடி அங்கு ஓர் ஏகோதிஷ்ட சிரார்த்தம் உடனே செய்ய வேண்டும். தினந்தோறும் கொண்டு செல்லும் பசு, குதிரை மனிதர் முதலியவைகளால் யமன் திருப்தியடைவதில்லை என்பதை எல்லோரும் கூறிக்கொண்டு பங்காளிகள் தெற்கு நோக்கிச் செல்ல வேண்டும். வழியில் சிராா்த்தங்களைச் செய்து பூதங்களுக்குப் பிண்டமளிக்க வேண்டும். அங்கு கொண்டு போய் தெற்குப் பக்கம் தலையிருக்கும்படி பிரேதத்தை வைத்து அங்கு ஓர் சிராா்த்தம் செய்ய வேண்டும்.

பின்பு பிரேதத்தின் மீது மூடிய வஸ்திரத்தில் பாதியைக் கிழித்து அங்கு வசிக்கும் பூதங்களுக்காக எறிய வேண்டும். பிறகு நெய்யால் அதை நனைத்து அதன் கையில் பிண்டத்தையளித்து விதிப்படி தீ வைக்க வேண்டும். தகனம் முதலிய கிரியைகளிற்கு அதிகாரிகள் இருபதின்மர்களாவர். அதில் புத்திரனே பிரதான கருத்தா ஆவான் என நூல்கள் கூறுகின்றன். பிரமசாரியானவன் தன் மாதா பிதா அல்லாதவருக்குத் தகனாதிக் கிரியைகள் செய்தலாகாது.

முதலாம், மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாட்களுள் ஒன்றினுள்ளே அஸ்திசஞ்சயனம் என்னும் கிரியை நடைபெறும். அதாவது தகிக்கப்பட்டவரின் எலும்பையும் சாம்பலையும் முறையான சமஸ்காரங்களுடன் எடுத்து புண்ணிய தீர்த்தத்தில் சேர்த்தலே அஸ்தி சஞ்சயனம் அல்லது சாம்பல் எனப்படும். சாம்பல் அள்ளப்படும் இடங்களை ஆக்கிரமித்திருக்கும் பூதபைசாசங்களைத் திருப்திபடுத்தும் பொருட்டுப் பழம், ரொட்டி, இளநீர் முதலியவை பலியாக இடப்படும். அவரைத் தீயிட்டு தகித்தமை பற்றிய தோஷத்திற்கு இது சாந்தியாக அமையும். இதற்காக நிலமும் தகிக்கப்பட்டதற்குச் சாந்தியாக இனி ஒருகால் நிலங்குளிர்வித்து நிலங்குளிர வேண்டும் என்பது விதியாகும். இக்கிரியைக்கு காடாற்றுதல் என்ற பெயர் வந்தது இதனாலேயாகும்.

சம்பந்தப்பட்ட உயிரானது அபயக்கிரியையின் இறுதியாக வரும் சபிண்டீகரணம் என்னும் கிரியையின், தன் தகுதிக்கேற்றளவு சிவகதியில் மேல்நிலையடைவதாகவும். தன் வாழ்நாளில் அது செய்து வந்த சமயக்கிரியைகளில் அவ்வப்போது ஏற்படக்கூடியதாயிருந்த குறைவுகளை சம்பந்தபபட்ட உயிரானது, அபயக்கிரியையின் இறுதியாக வரும் சபிண்டீகாரணம் என்னும் கிரியையின் பின் தன் தகுதிக்கேற்றளவு சிவகதியில் மேல்நிலையடைவதற்காகவும் தன் வாழ்நாளில் அது செய்து வந்த சமயக்கிரியைகளில் அப்வப்போது ஏற்படக்கூடியதாயிருந்த குறைவுகளை நிறைவாக்குவதாகவும் இச்சமய அந்தியேட்டி செய்யப்படுகின்றது.

இக்கிரியை ஒழுங்கில் அவ்வுயிர் மேற்கதியடைவதற்கேதுவான தகுதிப்பாட்டை வருவித்தற்காக வேண்டுவன எல்லாம் மந்திரக்கிரியை ரூபமாகச் செய்து முடிவில் அதனைச் சிவாக்கினியில் சேர்த்து அவ்வகையால் சிவனிடத்தில் சேர்த்து விடுதலாகிய நடைமுறைக் கிரமம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது

"புரோகிதரில் பிரேத சரீர சம்பந்தமான உயிரை ஆவாகனம் செய்து தாணம் செய்யும் சிராா்த்தம் ஏகோதிஷ்டம் எனப்படும். மாசாமாசம் இறந்த திதியில் செய்யப்படும் சிராத்தம் மாசிகம் எனப்படும். பிண்டங்களின் மூலமாக இறந்தவரின் உயிரை பிதிர்களுடன் சேர்த்தல் சபிண்டீகரணம் எனப்படும். முதலாவது வருட முடிவில் இறந்த திதியில் செய்யப்படும் சிராா்த்லம் ஆப்திக சிராா்த்தம் எனப்படும். இதுவே அபரக் கிரியையின் பூர்த்தியாகக் கருதப்படும். சிராா்த்த கிரியைகளின் தொடர்பு இடையறாதிருக்கச் செய்வதற்காகவும் பிதிர்களை இடையறாத திருப்த்திநிலையில் வைத்துக்கொள்வதற்காகவும் வசிக்குமிடங்களில் மந்திரக்கிரியை வாசனையை ஏற்படுத்துமுகமாகவும் வருடாவருடம் இறந்த திதியில் செய்யப்படுவது வருட சிராா்த்தம் எனப்படும்.

வருடத்தில் புரட்டாதி மாதத்து அபரபக்கம் (அமாவாசைக்கு முன் பதினைந்து நாள்) பிதிரர்க்கு விசேட காலம் என்னும் கருத்துண்டு. அக்காலத்தில் அவர்களின் திருப்தி வேண்டிச் செய்யப்படும் சிராா்த்தம் மஹாளய சிராா்த்தமாகும். இக்காலத்தில் பிதிரர்கள் பூமியில் வந்து பதினைந்து நாட்கள் தங்கி, புத்திரன் முதலியவர்களுக்குச் சுபத்தைச் செய்யும் காலம் என்று பொருள். மற்றும் சிராா்த்தங்களில் ஏற்படும் குறைநிறைகளிற்கு இது சாந்தியாக அமையும். ஆலயங்களில் அர்த்தசாமப்பூசை போல் அபரக் கிரியையில் இது இடம் பெறும். அமாவாசை நாளில் விரதமிருந்து பிதிர் திருப்திக்காக எள்ளும் தண்ணீரும் இறைத்தல் தந்தை வர்க்கம், தாய் வர்க்கம் இரண்டினுக்கும் நன்மை தருவதாக அமாவாசைத் தர்ப்பணம் அமைகிறது.

அக்னி சாட்சியாகச் செய்யப்படுகின்ற திருமணக் கிரியையும், தேகம் அக்னிக்கு மயானத்திற்கு ஆஹுதியாககிற மரணக்கிரியையும் இந்துக் கிரியைகளில் அதுவும் வீட்டுக் கிரியையில் மிகவும் முக்கியமுடையனவாக விளங்குகின்றன. இக்கிரியைகளை அர்த்தமறிந்து சிரத்தையுடன் அனுஷ்டித்தால் ஆத்மானந்த ஜோதியைப் பெறுவது திண்ணம்.

உசாவியவை :-

நாற்பது ஸம்ஸ்காரங்கள் : ஸ்ரீவத்ஸஸோமதேவசர்மா


தெய்வத்தின் குரல் : ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

சிராா்த்த தீபிகை : சிவஸ்ரீ - ச. குமாரசுவாமி குருக்கள்


ஆசார ஒழுக்கமுறை : பரமசிவன்பிள்ளை.

Heritage of Vedic Culture - Satyavarata Siddhantalankar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(1)



(2)



(3)

1) சிவநெறியின் மூன்றாவது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டினை புலவர் வை. சோமஸ்கந்தர் அவர்கள் அருளன்பர் திரு. நா. கணபதிப்பிள்ளைக்கு வழங்குகின்றார்.

2) இந்தியாவிலிருந்து திரும்பி அலஸ்தோட்ட அகதிமுகாமில் வதியும் மாணவர்களுக்கான எழுத்துப்பயிற்சி வகுப்பு பேரவையின் கல்விப் பொறுப்பாளர் ஆசிரியர் திரு. கு. நளினகாந்தனின் நெறியாள்கையில் நடைபெறுகின்றமையைக் காண்க.

3) திருவெம்பாவை நடைபஜனையில் பேரவையின் சிறுவர் அணியினரும், தொண்டர் அணியினரும் இந்து மகளிர் அணியினரும் உற்சாகத்துடன் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(1)



(3)





(2)

1) பேரவையின் மதிப்பார்ந்த பொதுச்செயலாளர் சிவஞானச் செல்வர் திரு. செல்லப்பா சிவபாதசுந்தரத்துக்கு பாராட்டு விழாவின்போது ஞானசிரோன்மணி பண்டிதர் திரு. இ. வடிவேல் பாராட்டுப்பத்திரம் வாசித்தளிப்பதையும், பேரவை அமைப்புச்செயலாளர் திரு. நா. காளிராசா மலர்மாலை அணிவதையும் தி/மேலதிக அரசாங்க அதிபர் திரு. ந. புவனேந்திரன் அவதானிப்பதையும் காண்க.

2) பேரவையின் துணைத்தலைவர்களில் ஒருவரும் சிவநெறி ஆசிரியருமான திரு. கு. கோணாமலை அவர்கள் பேரவை சார்பில் மதிப்பார்ந்த பொதுச்செயலாளருக்கு மோதிரம் அணிவிக்கின்றார்.

3) பேரவையின் வருடாந்த ஒன்றுகூடலில் அன்புவழிபுரம் இந்து இளைஞர் மன்றப் பாலர் பாடசாலைச் சிறார்கள் செம்பு நடனத்துக்கு ஆயத்தமாகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருடாந்த ஒன்று கூடலில் பேரவையின் மூதூர் அன்னை சாரதா மகளிர் இல்ல மாணவிகள் கோலாட்டம் ஆடுகின்ற காட்சி.

**சுவாமி சந்நிதானங்களை எந்த முறையாகத் தரிசனஞ் செய்தல் வேண்டும்?**

முன்பு துவாரபாலகரை வணங்கி, பின்பு கணநாயகராகிய திருநந்திதேவரை வணங்கித் துதித்து, "பகவானே, உம்முடைய திருவடிகளை அடைந்து அடியேன் உள்ளே புகுந்து சிவெபருமானைத் தரிசித்துப் பயன் பெறும் பொருட்டு அநுமதி செய்தருளும்" என்று பிரார்த்தித்துக் கொண்ட, உள்ளே போய், முன் விக்கினேசுரரைத் தரிசனஞ் செய்து, பின் சிவலிங்கப் பெருமான் சந்நிதியும் உமாதேவியார் சந்நிதியையும்அடைந்து, ஆதிசைவரைக் கொண்டு அருச்சனை செய்வித்துப் பழம் பாக்கு வெற்றிலை முதலியனவற்றை நிவேதிப்பித்துக் கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப்பண்ணித் தரிசனஞ் செய்து விபூதி வாங்கித் தரித்துக் கொண்டு, அதன்பின் சபாபதி தஷிணாமூர்த்தி சோமாஸ்கந்தர் சந்திரசேகரர் சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையுஞ் சமயகுரவர் நால்வரையுந் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

**விக்னேசுரரைத் தரிசிக்கும் பொழுது யாது செய்தல் வேண்டும்?**

முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும் இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தாழ்ந்தெழுந்து கும்பிடல் வேண்டும்.

**நித்தியமும் நியமமாக ஆலய தரிசனஞ் செய்ய இயலாதவர் யாது செய்தல் வேண்டும்?**

சோமவாரம், மங்களவாரம், சுக்கிரவாரம், பிரேதாஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி, விநாயகசட்டி, கந்தசட்டி முதலிய புண்ணிய காலங்களிலாயினும் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

**சுவர்க்கத்திலே இன்பம் அநுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?**

தொலையாது எஞ்சிநின்ற கன்மசேடத்தினாலே திரும்பப் பூமியில் வந்து மனிதர்களாய்ப் பிறக்கும்.

**நரகத்திலே துன்பம் அநுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?**

தொலையாது எஞ்சிநின்ற கன்மசேடத்தினாலே திரும்பப் பூமியில் வந்து முன்பு தாவரங்களாயும், பின்பு நீர்வாழ்வனவாயும், பின்பு ஊர்வனவாயும், பின்பு பறவைகளாயும், பின்பு விலங்குகளாயும் பிறந்து, பின்பு முன் செய்த நல்வினை வந்து பொருந்த மனிதர்களாய்ப் பிறக்கும்.

**எழுவகைப் பிறப்புக்களாவன யாவை?**

தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவைகளாம். இவ்வெழு வகையினுள்ளும் முன் நின்ற ஆறும் இயங்கியற் பொருள்கள். இறுதியில் நின்ற தாவரங்கள் நிலையியற் பொருள்கள். இயங்கியற் பொருளின் பெயர் சங்கமம், சரம். நிலையியற் பொருளின் பெயர் தாவரம், அசரம்.

**எழுவகைப் பிறப்பினுள்ளும் எந்தப் பிறப்பு அருமையுடையது?**

பசுபதியாகிய சிவபெருமானை அறிந்து வழிபட்டு முத்தியின்பம் பெற்றுய்தற்குக் கருவியாதலால் மனிதப் பிறப்பே மிக அருமை யுடையது.

**சிவதீஷை பெற்றபின் அவசியமாக அநுட்டிக்கப்படும் கருமங்கள் எவை?**

இயமநியமங்களும், சந்தியாவந்தனம், சிவலிங்கபூசை, தேவார திருவாசக பாராயணம், சிவாலய கைங்கரியம், சிவாலய தரிசனம், குருவாக்கிய பரிபாலனம், இயன்ற மட்டும் மாகேசுர பூசை முதலியவை களுமாம். (கைங்கரியம் - தொண்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





(3)




(2)

1) பேரவையின் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம், கந்தளாய் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றைத் தரிசித்து கந்தளாய் விக்நேஸ்வரா வித்தியாலயத்தில் காணப்படுகின்ற காட்சி.

2) பேரவையினால் பாடசாலை நூலகங்களுக்கு நூல்கள் வழங்கும் நிகழ்ச்சியில் தி/ புனித சவேரியார் மகாவித்தியாலயத்தின் அதிபர் திரு. வ. தங்கவேல் அவர்கள் மங்கள விளக்கேற்றுகின்றார்.

3) பாடசாலை நூலகங்களுக்கு நூல் வழங்கும் நிகழ்வின் பிரதம விருந்தினராக மாகாணக்கல்விப் பணிப்பாளர் திரு. க. தியாகராசா அவர்கள் எமது சார்பில் ஓர் ஆசிரியையிடம் நூற்பொதியினை வழங்குகின்றமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திர விளக்கம்

அகாரம் இகாரம் உகாரம் ஓங்காரம் மகரமாகிய ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்மா குரு தீட்சை பெற்ற ஞானிகளுக்கு அகாரம் உகாரம் மகாரமாகிய மூப் பதங்களில் இயங்கி '' ஓம் '' என்னும் நாதத்தை இறைவனின் நாமத்தை ஓதி சித்தாகாசத்தில் சோதியாய் வெளிப்படும் திருமந்திரம் விளக்குகின்றது.

885 ஓரெழுத்தாலே உலகெங்கும் தானாகி
ஈரெழுத்தாலே இசைந்தங் கிருவராய்
மூவெழுத்தாலே முளைத்தோங்கும் சோதியை
மாவெழுத்தாலே மயக்கமே உற்றதே.

அழியாத மெய்ப் பொருளான சிவன் '' ஓம் '' என்னும் திருநாமத்தைக் கூறிக்கொண்டு சித்தாகாசப்பரப வெளிக்கு ஏறி தன் பசுத்தன்மை மாறிச் சிவனாகும் தத்துவத்தைக். கீழ்காணும் திருமந்திரம் கூறுகின்றது.

கூறும் பொருளிது அகார உகாரங்கள்
ஏறும் பொருளிது சிந்தையுள் நின்றிட
கூறும் அகாரம் குழல் வழி ஓடிட
மாறும் அமர்ந்திடும் அண்ணலு மாமே.

யோகிகள் பிரணவ சொருபத்தில் மனத்தைப் பதித்து தவம் செய்து மண்ணுலகம் கடந்து விண்ணுலகப் பெருவெளியில் ஏறும் பல நிலையங்களைக் கண்டு பலவாறாகப் பெயர்கள் சூட்டி விளக்கியுள்ளார்கள். திருமூலர் அவ்விடயங்களை இலங்கை, தில்லை, சிற்றம்பலம் சிதம்பரம், அருலம்பலம், பேரம்பலம், சிவலோகம், சிவபூமியென்று பலபாடல்களில் கூறியுள்ளார்.

2747 மேருநடு நாடி மிக்கிடை பிங்கலை
கூரும் இவ்வானில் இலங்கைக் குறியுறுஞ்
சாருந்திலை வனத் தன் மாமலயத்து
ஏறுஞ் சுழுனை இவை சிவபூமியே.

- பிராண வாயுவை அகார உகாரத்தில் சுழுனை நாடியில் இயங்கச் செய்வதே தவம்.

2754 இடை பிங்கலை இமவானோடு இலங்கை
நடு நின்ற மேரு நடுவாஞ் சுழுனை
கடவுந் திலை வனம் கைகண்ட மூலம்
படர் வொன்றி யென்னும் பரமாம் பரமே.

இமவான் சித்தாகாசப் பரவெளியைக் குறிக்கும்.

262 அறம் அறியார் அண்ணல் பாதம் நினையுந்
திறம் அறியார் சிவலோக நகர்க்குப்
புறம் அறியார் பலர் பொய் மொழி கேட்டு
மறம் அறிவார் பகை மன்னி நின்றாரே

அறம் - பிராணாயாமம் ஓதும் தவநெறி
அண்ணல் பாதம் - கருவில் மிதித்த இறைவனின்
பாதம் ஆத்மசக்கரத்தின் 'முதலெழுத்தான
அகார எழுத்து, சிவலோக நகர் விண்ணுலகில்
தில்லை நகரம் பொய் மொழி - அஞ்ஞானம்
மறம் - பாவ வழி

சுவாமி விவேகானந்தர் கூறுவது போல் வாழ்வின் உயர்விற்கும் ஆத்ம ஈடேற்றத்துக்கும் அவசிய மானது தன் ஆத்மாவை அறிந்து அதில் நம்பிக்கை வைப்பது இந்த மார்க்கத்தையே பகவத் கீதையும் புத்த பெருமானும் இரமணமகாரிஜியும் எமது நாட்டில் வாழ்ந்த யோகர் சுவாமியும் கூறியுள்ளார்கள். வட இந்தியாவில் இந்து சமயத்தை வகுத்த பதஞ்சலியும் தமிழ் நாட்டில் சைவசமயத்தை வகுத்த திருமூலரும் நந்தி தேவரின் சீடர்கள் ஒரே மார்க்கத்தையே இருவரும் யோக சூத்திரத்திலும் திருமந்திரத்திலும் விளக்கியுள்ளார்கள்.

2355 தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்த பின்
தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே.

1445 நாடும் நகரமும் நற்திருக்கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்த பின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே

இம்மார்க்கத்தைக் கடைப்பிடித்து மானிடப் பிறப்பின் நோக்கத்தைப் பூர்த்தி செய்வோமாக.

'' தவம் செய்வார் தம் கருமம் செய்வார் - மற்றல்லார்
அவம் செய்வார் ஆசையுட்பட்டு '' என்று திருவள்ளுவர் திருக்குறளில கூறுகின்றார்.

— திருமூலர் சங்கம் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பொருள்கள்

சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள்
'' சிவாகமக்கிரியா திலகம் '' கந்தசாமி கோவில் மஹோற்சவ குரு வில்லூன்றி திருமலை

உலகில் எண்ணிறந்த ஆன்மாக்கள் பிறக்கின்றன. வாழ்கின்றன. இறக்கின்றன. இவை எங்கிருந்து வருகின்றன. எங்கு போகின்றன என்பதை நாம் அறிய முடிவதில்லை. சூரியன் கிழக்கில் உதிக்கின்றான். மேற்கில் மறைகின்றான் இரவில் நட்சத்திரங்கள் தோன்றுகின்றன. காலையில் மறைகின்றன. சூரியன் வெப்பத்தைத் தருகின்றான் இரவில் சந்திரன் தண்ணொளி வீசி வருகின்றான். இவை நாளாந்தம் நடைபெறுகின்றன. இவை எப்படி நடைபெறுகின்றன என்பதை நாம் சிந்தித்தால் இதற்கு ஒரு தலைவன் ஆணைப்படி நடக்கிறது என்பது புலனாகும் இந்தத் தலைன் யார் ? அவன் எங்கு இருக்கிறான் என்பதைப் பார்ப்போம்.

## பதி

உலகில் எல்லாமாகி நின்றும், தான் தனித்து நின்றும் இருக்கிறது பரம்பொருள் அதனால் மணிவாசகர் '' ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க '' என்று கூறினார் ஆன்மாக்களுக்குள் ஆன்மா விளங்குவதால் இறைவனை '' அந்தராத்மா '' என்கிறோம் '' அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து ''

— திருவருட்பயன் —

அகரமாகிய உயிர் எல்லா எழுத்துக்களில் பரவியும் தான் தனியாகி நிற்கும் தன்மை போல என்றார் உமாபதிசிவம். உயிர்களின் அறிவைக்கடந்து நிற்கும் நிலை சொரூபநிலை மக்களாகிய நம்மீது கொண்ட கருணையினாலே வீடு பேறு அளிப்பதற்கு படிப்படியாக கீழே இறங்கி வந்து தடத்தநிலை அடைந்து சக்தியோடு கூடி நம்மை ஆட்கொண்டு தன்வயமாக்குகிறார் சக்தியோடு கூடி அருள் செய்கின்ற தன்மையினாலே தான் மணிவாசகர் '' அம்மையே அப்பா ஒப்பிலா மணியே '' என்று பரவினார் சொரூப லக்கணத்தையுடைய சிவம் உயிர்களின் துன்பங்களை போக்கி அருள் செய்வதற்கு இரக்கப் கொண்டு பல நிலையிலுள்ள கடவுள்களை அதிட்டித்து நின்று அவர்கள் மூலமாக படைத்தல் காத்தல் அழித்தல். மறைத்தல் அருளல் என்கிற ஐந்தொழில்களை இயற்றுவித்து அதன் மூலமாக வீடு பேறு அடைவதற்கான முதற்படிகளை அருளுகிறார். தடத்த நிலையில் சிவத்தோடு நிற்கும் சக்தி முதன்மை பெற்று விளங்கும் அதனால் '' சக்தியிருந்தால் செய் '' என்கிறோம் செய்ய முடியாவிட்டால் '' சிவனே என்று கிட '' என்றும் சொல்கிறோம் சக்தியே உயிர்களைச் சிவத்தோடு சேர்க்க உதவி செய்கிறது இதனைத் திருவருட்பயனும் '' தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான் '' என்று கூறுகின்றது. சிவனும் சக்தியும் பிரிவின்றி இருக்கும் நிலையை பழமும் சுவையும் போல என்றும் மணியும் ஒளியும் போல என்றும் நெருப்பும் சூடும் போல என்றும் விளக்குகிறார்கள் சொரூப நிலையில் குணம், குறி ஒன்றும் இல்லாதிருக்கின்ற பரம்பொருள் தடத்த நிலையில் பல குணம் பொருந்தி நிற்பர்.

## பசு

இவை எண்ணிறந்தவை, அநாதியானவை இவ்வான்மாக்களைச் சித்தாதிகள் மூன்று வகைப்படுத்தினர். சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர், என்பன. ஆணவம், கன்மம், மாயை ஆகிய இருமலமுடையவர் பிரளயாகலர் என்றும், ஆணவம் என்னும் ஒரு மலமுடையவர் விஞ்ஞானகலர் என்றும் பகுக்கப்படுவர். உயிர் அறியும் ஆற்றல் உடையதாயினும் அறிவித்த வழியே அறியவல்லது. ஆணவ மலத்தோடு அத்துவிதமாய்க் கலந்திருக்கும் கேவலநிலையில் ஒன்றையும் அறியாது சடமாகவே கிடக்கும் ஆன்மா கருவி கரணங்களோடு கூடிய உடம்பு கிடைக்கும் போது அவற்றின் உதவியால் அறிவைப் பெறுகின்றது. ஆன்மா அசத்தாகிய உலகைச் சாரும் போது அசத்தாகியும் சத்தாகிய சிவனைச் சாரும் போது சத்தாகியும் நிற்கும் ஆதலால் அது சதசத்து எனப்படும். ஆணவப் பிணியிலிருந்து விடுபட்டு வீடுபேறு அடையவே ஆன்மாவுக்கு தனு, கரண, புவன போகங்களை இறைவன் அருளுகின்றான்.

## பாசம் : ஆணவம் :

ஆணவமலமும் அநாதியானது இம்மலம் உயிரோடு பந்தித்து அநாதியாகவுள்ளது இம்மலமானது அரிசியில் தவிடு போலவும் செம்பிற் களிம்பு போல ஆன்மாவை பீடித்துள்ளது அநாதியாகவே ஆன்மாவை பற்றியிருப்பதால் மூலமலம் என்று கூறுவார்கள். இம்மலத்தின் தன்மையினாலே ஆன்மா நான் என்கிற அகங்காரத்தையும், எனது என்கிற மமகாரத்தையும் வெளிக்காட்டி நிற்கின்றது. உலகை இருள் சூழ்ந்து எல்லாவற்றையும் மறைப்பது போல ஆன்மாவின் அறிவையும் மறைத்து விடுகிறது. இதனால் இம்மலத்தை இருள்மலம் என்று கூறுவர். இது இருளிலும் பார்க்கக் கொடியது ஆதலால் '' ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும் இரு பொருளும் காட்டாது இது இருளால் உலகம் மறைத்தாலும் இருள் தனது உருவமாகிய இருளைக்காட்டும். ஆனால் இம்மலம் தன்னையும் காட்டாது பிற பொருளையும் காட்டாது என்று திருவருட்பயன் ஆசிரியர் இதன் கொடிய தன்மையை விளங்க வைக்கிறார். உயிர்கள் அனுபவிக்கும் இன்பதுன்பங்களுக்கெல்லாம் மூல காரணமாக உள்ளது இவ்வாணவ மலமே என்று கூறலாம்.

## கன்மம்

கன்மம் என்பது வினை என்று பொருள்படும். இவை நல்வினை, தீவினை என இரு வகைப்படும். இந்த வினை இரண்டும் மனம் வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் செய்யப்படுவனவாகும் அவையாவன பசுநல்வினை, பசுதீவினை. சிவநல்வினை, சிவதீவினை வெறுவினை, பற்றற்றவினை எனவும் ஆறுவகைப்படும் உயிர்கள் பால் செய்யப்படுகின்ற வினை பசுநல்வினை, பசுதீவினை எனவும், இறைவன் பால் செய்யப்படுகின்ற வினை சிவநல்வினை, சிவதீவினை எனவும் பயன் கருதாது செய்கின்ற வினை வெறுவினை, பற்றற்ற வினை எனவும் கூறுகின்றன. நாம் செய்கின்ற வினையானது இப்பிறவியிலே அனுபவித்து அனுபவிக்க முடியாது எஞ்சியுள்ள வினையை சேர்த்து வைக்கப் படுகிறது. சேர்த்து வைக்கப்பட்ட வினையை சஞ்சித வினை என்று சொல்வப்படுகிறது சஞ்சிதத்திலிருந்து அனுபவிப்பதற்கு எடுத்துத்தரப்படுகிற வினை பிராரப்தம் எனப்படும் புதிதாகச் செய்யப்படுகின்ற வினையை ஆகாமியம் என்று கூறுவர் இவ்வினையின் பயனாகவே இபன்துன்பம் நமக்குக்கிடைக்கின்றது. புண்ணியம் செய்யும் உயிர் நல்லிடத்தை அடைந்து நன்மையோடு வாழும் பாவம் செய்யும் உயிர்கள் பொல்லாத சூழ்நிலைகளிற் பிறந்து பாவத்தை அனுபவிக்கும்.

(தொடர்ச்சி 24ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்து அறிவியல் சுவட்டில்

— சித்தரடியான் —

சித்தர்களின் தியான, யோக பயிற்சிகள் அவர்களுக்கே உரிய முறையில், அவர்களுக்கே உரிய தனிப்பட்ட வழியில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த போதிலும் எல்லாமக்களும் என்று கூட சில வழி முறைமார்க்கங்களினை ஏற்படுத்தவும் தவறவில்லை.

சரியை என்கின்ற தொண்டு
கிரியை என்கின்ற வழிபாடு
யோகம் என்கின்ற நட்புறவு
ஞானம் என்கின்ற பேரறிவு

என்றவாராக வரையறுத்து அவற்றிற்கான இலக்கணங்களும் வரையறுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அறிதியிடுதலில் திருமூலர் முக்கிய பங்கெடுக்கிறார். திருமந்திரத்தில் இம்மார்க்கங்கள் பற்றியும் அவற்றின் இலக்கணங்களையும் அவை தம்மால் ஆகும் நற்பயன்களும் கூறப்படுகின்றன. சரியை அல்லது தொண்டு நெறி எனும் தாசமார்க்கம் உடல் கொண்டு செய்யும் வழிபாடாயும் இதன் மூலம் சாலோக முத்தியும் காட்டுகிறது.

கிரியை அல்லது செயல் கொண்டு செய்யும் நெறியான சற்புத்திரமார்க்கம், சரியையின் முதிர்ச்சியில் உதிக்கிறது இதன் மூலம் சாமீபமுத்தி கிட்டுகின்றது.

யோகம் அல்லது நட்புநெறியான சகமார்க்கம், கிரியையின் முதிர்ச்சியாகும் இதன் மூலம் சாரூப முத்தி கிட்டுகின்றது.

இறுதியில் பேரறிவு நெறியாகிய ஞானத்தினை சன்மார்க்கம் என்கிறது திருமந்திரம்.

யோகத்தின்போது பரம்பொருளோடு ஒன்றிய ஆத்மா பிராணனை குண்டலினி எனும் ஆற்றலோடு எழுப்பி ஒளி நிலையில் நிறுத்துகிறது. இதனால் பெறப்படுகின்ற அறிவு ஞானம் எனப்படும்.

இவ்வாறு பெறப்படும் அறிவு இயற்கை அறிவாகிய பசுஞானமாயும் ஆண்டறிவு எனும் பாச ஞானமாயும் பெறப்படுகிது. இதுவே குருவினால் உணர்த்தப்பெற்று உதித்தெழுந்து வளர்ந்து மெய்ஞ் ஞானமாய் பரஞானமாய் விரிகிறது.

இவ்வாறாக சன்மார்க்கம் மூலம் பெறப்படுகின்ற முத்தி சாயுச்சிய முத்தியாகும்.

சுருக்கமாய் கூறினால் மனிதரை ஏதாயினும் ஓர் முக்தியை பெறவைப்பதற்கான வழிவகையே இந் நாற்பாதங்களின் வடிவமைப்பாகும்.

மனிதன், மனதுள்ளவனாதலினால் அவனிடம் எண்ணுகின்றசெயல் இயல்பானதாயுள்ளது. ஓயாமல் உலகப்பொருள்கள் பற்றி எண்ணி எண்ணி அவற்றோடு ஒட்டிக்கொள்கின்றான். மனிதன் அடைந்துள்ள நாகரீகம் யாவும் இவ்வெண்ணங்களின் வெளிப்பாடுகளே.

எம்முதாதைகள் அழியும் உலகப்பொருள் மீது மனம் செலுத்தாமல் என்றும் அழியாப்பொருளில் தம்மனதை செலுத்தி அதில் வெற்றியும் கண்டனர் அவ்வாறு பெற்ற வெற்றியின் பயனாய் பெற்றுக் கொண்டது யோக சாஸ்திரம்.

மனம் என்கின்ற தத்துவம் என்றுமே தனியானதாக இருந்ததில்லை. எண்ணுகின்ற ஒவ்வொரு எண்ணமும் ஒரு சக்தியாகின்றது. அந்தச்சக்தி அதனுடைய தன்மைக்கு ஏற்ப மனிதநிலையினை மாற்றி அமைக்கின்றது. இதனை நாம் மனோசக்தி என்கிறோம்.

எம்மை பூலோகத்துணர்வுகளுடன் பொருத்தி பாசத்தில் இட்டு விடுதலும், உலகசேவை, கடவுள் பக்தி உணர்வுகளுடனும் பொருத்தி பண்பாட்டை வாழ்வித்தலும், அடிப்படை மனதிலிருந்து ஒழுக்கப் பண்பு போன்றவற்றை உடலுக்கு ஊட்டி உடலுக்கு மாற்றத்தை ஊண்டாக்கலும் இச்சக்தியின் சித்துக்கள்.

சிந்தனை திருத்தி சிவமாக்கி......
என்கிறார் மணிவாசகர்.

நல்லதான ஒருமனம் என்று தீமையினை நாடாது அது அன்பினைச் செய்யும் அல்லது சாட்சியாய் அமைந்து விடும். எந்த அளவிற்கு ஒரு மனதில் அன்பு பெருகுகிறதோ அந்த அளவிற்கு அம்மனதிலிருந்து பகை அகன்றுவிடுகிறது.

அகண்டமான கடவுளிடம் அன்பு கொண்டவன் உலகில் எப்பகையுமின்றி வாழக்கூடும் என்பதே சித்தர்களின் முடிவு.

(தொடர்ச்சி 20ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(19ம் பக்கத்தொடர்ச்சி)

'' எண்ணாயிரத்தாண்டு யோகம்
இருக்கினும்
கண்ணார் அமுதினை கண்டறிவார் இல்லை
கண்ணாடியுள்ளே ஒளிபெற நோக்கில்
கண்ணாடி போல கலந்திருந்தானே ''

எவ்வளவு காலம் எத்தனையோ புறப்பயிற்சி செய்தாலும் இறை இன்பம் கிட்டுவதில்லை. அகலிடம் நாம் உடலுள்ளே உள்ளத்தை முதலில் அறிந்திடவேண்டும். நாம் பார்க்கும்பொழுது நாம் செல்வதற்குரிய பாதை தெளிவாகிறது.

இவ்வாறே தத்தம் பாதைகளினை சித்தர் பெருமக்கள் காலாகாலமாக நிர்ணயித்து வருகின்றனர்.

அகநாடிகொண்டு அகலிடம் காணும் சித்தர்களும், ஞானிகளும் பரம்பொருளை ஒளிபாயும் ஒலிபாயுமே காண்கின்றனர்.

' கண்டறியாதன கண்டேன்... ' என்பதாய் கூறப்படுகிறது-

மனத்திலேகேட்கப்படும் ஒலிவகைகள் பத்து மணியோசை கடல் ஓதம், யானையின் பிளிரல், வெய்ங்குழல் ஓசை வண்டின்மிழற்றல், தும்பிநாதம், பேரிகை முழக்கம், யாழினிசை, முகிலோசை, வளைகளின் ஒலி.

இவ்வாறாக ஒலி, ஒளிகளை உணர்தல் அல்லது பார்த்தல் சித்தம் ஆகும். இதனை அகத்தே அறிதல் என்றும் கூறலாம். இவ்வாறு சித்தம் மூலம் கண்டு அதன்மூலம் பெற்றுக்கொண்டவை சித்து என்கிறோம்.

அதாவது அகத்தே ஒலி, ஒளிகளை உணரும்பொழுது அகலிடம் உள்ளும் புறமுமாய் விரிய, சிவாண்மாவானது பரமாண்மாவின் சுகத்தினை துய்க்கிறது.

இவ்வாறான இணைப்பினைப் பெறும் பாலமே தியானம் மேலான தியானம் அல்லது ஆழ்தியானம் மூலம் சித்தம் கைகூடும் என்கிறது சித்தர் இலக்கியம்.

எங்கோ பரந்திருக்கும் பரம்பொருள் அலைகளை கவர்ந்து அவற்றை மனதுள்குவித்தலே தியானத்தின் அடிப்படை. இரும்புத்துண்டை அடிக்கடி காந்தத்துடன் தேய்க்கும்பொழுது அந்த இரும்புத் துண்டு காலப்போக்கில் காந்தத்தின் தன்மைபெறுவதுபோல், தியானத்தில் ஈடுபடும்போது மனம் தெய்வ ஆற்றலை மேவி மேவி தானும் பெறுகிறது

இவ்வாறு பல ஆண்டுகள் இப்பயிற்சிகள் முறையாய் மேற்கொள்ளப்பட்ட, உடலானது தவே சரீரம் எனும் உடலாய் மாறும்.

இவ்வாறு கூறுவது மட்டுமல்லாது இவை ஒன்றும் சுலபமான காரியமும் அல்ல என்றும் கூறுகிறது சித்தர் தத்துவம்.

(தொடரும்...)

## எண்ணமே எல்லாவற்றிற்கும் அடிப்படை

எந்தச் செயலும் இறைவன் அருளால் அன்றி நிகழாது இதனை, '' அவனன்றி ஓர் அணுவும் அசையாது'' என்று தாயுமானார் குறிக்கின்றார். ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே'' என்று அப்பர் பெருமானும் இக்கருத்திலேயே விளக்கியிருக்கிறார். ஒரு சில திருப்பணிகள் விரைவிலேயே நிறைவுபெறுகின்றன. ஒரு சில திருப்பணிகள் தொடங்கப்பெற்றுப் பலகாலங்கள் ஆகியும் நிறைவுபெறாமல் உள்ளன. இவற்றிற்கெல்லாம் காரணம் ஆங்காங்குள்ள மக்கள் மனோபாவமும் செயல்முறைகளுமே ஆகும். மக்களின் மனநிலையை ஒட்டித்தான் இறைவன் திருவருளும் நிகழ்கிறது எண்ணியது நிறைவேறவேண்டுமாயின் எண்ணம் சரியாகவும் முறையாகவும் இருத்தல் அவசியம் எனவே நாடு நலமுற அமைய வீடு நலமுற அமைதல் இன்றியமையாததாகும். பல வீடுகள் சேர்ந்ததே ஊர் பல ஊர்கள் சேர்ந்ததே நாடு எனவே வீடு திருந்தினால் நாடு திருந்தும். இங்கு வீடு என்பது அங்கு வாழும் மனிதர்களையே குறிக்கும் எந்த நாட்டில் நல்லவர்களும், திறமையுள்ளவர்களும், நல்ல உழைப்பாளிகளும் இருக்கின்றார்களோ அந்த நாடும் ஊரும் நலம்பெறும் என்பது உண்மை. நல்லவர்களும் உழைப்பாளிகளும் இல்லாத நாடும் ஊரும் நலம் பெறுவது என்றும் இயலாதது என்பது கண்கூடு.

### நல்வழி

இறைவா !
என்னைப் பொய்மையிலிருந்து
உண்மைக்கு அழைத்துச் செல்
என்னை இருளிலிருந்து
வெளிச்சத்துக்கு இட்டுச் செல்
என்னை அழிவில் இருந்து
பூரண வாழ்வுக்குக்
கூட்டிச்செல்

— பிருகதாரணய உபநிடதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி கற்ற இளைஞர்கள் தெய்வீக நற்பணி ஆற்ற வேண்டும்

— தொகுப்பு: க. கனகராசா —

படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் வேலையில்லாமல் அவதிப்படுகின்றார்கள். நாட்டுக்குச் செய்ய வேண்டிய பணி ஏராளமாக இருக்க நாட்டின் செல்வத்தைப் பயன்படுத்தி கல்வி பயின்ற இளைஞர்கள் என்ன செய்வது என்று தெரியாது வீண்காலம் போக்குவதிலும் வேண்டாத செயல்களைச் செய்வதிலும் கிடைத்தற்கரிய மானுட வாழ்வை வீணாக்கி வருகிறார்கள். கல்வியானது அவர்களை முடவர்களாக்கி இருக்கிறது. தற்காலக் கல்வி அவர்களிடத்து சுயநலத்தை வேண்டியவாறு வளர்த்து இருக்கிறது பெற்றோர்களும், ஆசிரியர்களும் பணம் தேடுவதில் குறிக்கோளாக இருக்கிறார்கள். அவர்கள் பராமரிப்பில் வளரும் இளைஞர்கள் பரிதவிக்கும் நிலையில் இருக்கிறார்கள். இளைஞர்களே மோகவலையிலிருந்து விலகி ஊக்கமும், உற்சாகமும் உடையவர்களாக எழுந்திருங்கள் உங்கள் முன் நற்பணி காத்திருக்கிறது அப்பணியை மேற்கொள்ளுங்கள். வீறுகொண்டு அப்பணியைச் செய்வதில் விழிப்புடன் இருங்கள்.

கிராம மக்கள் படிப்பின்றி பண்பின்றி தன்னம்பிக்கையின்றி ஏதோ வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு முறையாக கல்வி தருவதற்கு நீங்கள் ஒன்று சேர்ந்து சங்கம் ஒன்று அமையுங்கள். அந்தச் சங்கத்தினர் தியாக உணர்வும், அடக்கமும், தன்னலமற்ற சேவை மனப்பான்மையும், சேவை செய்வதில் ஊக்கமும், தெய்வ நம்பிக்கையும் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். உங்கள் சங்கத்திற்கு '' இளைஞர் தெய்வீக நற்பணி மன்றம் '' எனப் பெயர் கொடுங்கள். ஒவ்வொரு கிராமத்திலுள்ள படித்த இளைஞர்கள் எல்லாரையும் ஒன்றுகூட்டி ஒவ்வொரு கிராமத்திலும் கிளைச் சங்கங்களை ஏற்படுத்துங்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் நூல் நிலையங்கள் ஏற்படுத்தி உலகியல் அறிவையும், விஞ்ஞான அறிவையும், வீரர்களுடைய வரலாறுகளையும், சான்றோர்களுடைய வரலாறுகளையும், புகட்டும் நூல்களை மக்கள் படிப்பதற்கும், அவர்களுக்குப் படித்துக்காட்டுவதற்கும் ஏற்பாடு செய்யுங்கள். ஆலயத்தைத் துப்பரவு செய்து அங்கு பஜனை, வழிபாடு, சமயச் சொற்பொழிவு போன்ற நிகழ்ச்சிகளை அமைத்து மக்களிடத்தில் பண்பாட்டை வளருங்கள். அன்பும் ஆர்வமும் உங்களைச் செயலில் ஈடுபடுத்துவதாகும்.

ஆதாரம் - '' தர்மசக்கரம் ''

---

### சிரத்தையைப் போற்றுவோம்

சிரத்தையால் தீ எரிகிறது
சிரத்தையால் செயலாற்றலும் ஊக்கமும் வளர்கின்றன
சிரத்தையின் துணையால் நற்காரியங்கள் நிறைவு பெறுகின்றன
சிரத்தையால் வாழ்க்கையில் வெற்றியும் பிடிமானமும் ஏற்படுகின்றன

சிரத்தையே செல்வம்
சிரத்தையே புகழ்
சிரத்தையே திறமை
சிரத்தையே வெற்றி
சிரத்தையே அருள் சக்தி
இத்தகைய சிரத்தையைப் போற்றுவோம்.

— ரிக்வேதம் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய வினா விடைப் புதிர் - 13
### சரியான விடைகள்

1. '' கூற்றாயின வாறு........ ''
2. இருள் தன்னைக்காட்டும் பிற பொருளைக் காட்டாது. ஆணவம் தன்னையும் காட்டாது என்பதால் ஆணவம் இருளிலும் கொடியது எனப்படுகிறது.
3. (1) அணிமா (2) கரிமா (3) மகிமா (4) இலகிமா (5) பிராத்தி (6) பிரகாமியம் (7) ஈசத்துவம் (8) வசித்துவம்.
4. கோ - கடவுள் (அரசன்); இல் - தங்குமிடம் கடவுள் ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் பொருட்டுத் தங்கும் இடம்.
5. அக்கினி.
6. சுப்பிரமணியம், சரவணபவன், தேவசேனாபதி, சுவாமிநாதன்.
7. இருபத்தெட்டு.
8. சிவனைக்குறித்து அனுட்டிக்கப்படுகிறது.
9. சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்.
10. பூசலார் நாயனார்.

### பரிசு பெறுவோர் விபரம்

**முதலாம் பரிசு**

செல்வி. செ. புஸ்பாதேவி,
ஆண்டு 11பி, ஸ்ரீ / சண்முகா இந்து மகளிர் கல்லூரி,
திருக்கோணமலை.

**இரண்டாம் பரிசு**

செல்வன் இ. சஞ்சீவன்,
471, திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை.

**மூன்றாம் பரிசு**

செல்வி. க மாலினிதேவி,
ஆலய வீதி, மூதூர் - 3.

**ஆறுதல் பரிசு**

1. செல்வி. அ. தேவரஜனி,
தி / விபுலானந்த வித்தியாலயம்,
திருக்கோணமலை.
2. செல்வி. க. சவுந்தரவடிவு,
அன்னை சாரதா மகளிர் இல்லம்,
47, மத்திய வீதி, மூதூர் - 4.
3. செல்வி. ஆர். கலைமகள்,
மல்லிகைத்தீவு, கிளிவெட்டி.
4. செல்வன். வி. வைகுந்தன்,
இல. 6, சிவன் வீதி,
திருக்கோணமலை.
5. செல்வி. சௌ. தஷாந்தினி,
அன்னை சாரதா மகளிர் இல்லம்,
47, மத்திய வீதி, மூதூர் - 4.

# மாணவர் உலகு

1. வேதம் என்பது - அறிவுநூல். தொகுத்தவர் - வியாசர்.
2. வேதகாலம் சிந்துவெளி நாகரிகத்தின் முடிவோடு தொடங்குகிறது.
சமயம் : இயற்கைக்குத் தெய்வாம்சம் கொடுத்து வழிபட்டனர். வேள்வி முக்கிய இடம் பெற்றது. வருமன் முதன்மைபெற்றிருந்தான் அக்கினி பாலம் - போல - ஊடகமாக விளங்கினான். தெய்வங்கள் - மூன்று வகை பிற்காலத்தில் வேதத்தில் முதன்மை பெற்ற தெய்வங்கள் முதன்மை இழந்தும், முதன்மை அற்றிருந்த தெய்வங்கள் முதன்மைபெற்றும் விளங்கின. 'உ+ம் சிவன், விஷ்ணு.
சமூகம் : குடும்ப வாழ்க்கை, சாதிப்பாகுபாடு விவாகமுறை, பெண்கள் நிலை, கல்வி, விளையாட்டுகள், பொழுதுபோக்கு, உணவு, உடை, அகணிலன்கள், பிணி, பிணிநீக்கும் மருந்து, ஆரோக்கிய வாழ்வு, ஆகியவை பற்றிய குறிப்புகள் உண்டு. (பார்க்கவேண்டிய நூல் - வடமொழி இலக்கிய வரலாறு. (வைதிக இலக்கியம்)

**உபநிடதங்கள் :**

பிரஸ்தானத் திரயம்

| உபநிடதம் | பகவத்கீதை | பிரமசூத்திரம் |
|---|---|---|
| 108 உபநிடதங்கள். இந்திய தத்துவஞானத்தின் பிறப்பிடம் | உபநிடதங்களின் சாரம் | 10 உபநிடதங்களின் விளக்கம். வேதாந்தத்துக்கு பிரமானநூல் |

1. உபநிடதங்கள் அறிவுப் பொக்கிஷம்
உப / நி / ஷத் - நெருங்கிக் கீழே அமர்தல் என்னும் பொருளுடையது. '' ஆத்மஞானத்தைப் பெறவிரும்பும் மாணவன் ஆசாரியனுக்கருகிருந்து கேட்கப்படும் இரகசிய மந்திரம் '', எனப் பொருள் விரிக்கப்படும்.

(23ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் செய்திச் சரம்

● பேரவையினால் க. பொ. த. சாதாரண வகுப்பு மாணவர்களுக்கான இலவச மீட்டல் வகுப்புக்கள் மூதூரிலுள்ள பட்டித்திடல் வித்தியாலயத்திலும், திருக்கோணமலை விபுலானந்த மகாவித்தியாலயத்திலும் ஒரு மாத காலம் சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்பட்டது. எல்லாமாக அறுநூறு மாணவர்கள் கலந்து பயன்பெற்றார்கள் பேரவையின் கல்விப் பொறுப்பாளர் ஆசிரியர் திரு. கு. நளினகாந்தன் அவர்கள் சகல விடயங்களையும் முன்னின்று நெறிப்படுத்தினார். மொத்தச் செலவு 17500/-

(நிதி உதவி : பேரவையின் கல்வி நிதியம்)

● இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பி அலஸ்தோட்ட அகதிமுகாமில் தங்கியுள்ள மாணவர்களுக்கு ஓர் எழுத்துப் பயிற்சி வகுப்பு இருவாரங்கள் தி/செல்வநாயகபுரம் அ த க பாடசாலையில் நடத்தப்பட்டது. மிக முக்கியமான இப்பயிற்சி வகுப்பையும் பேரவையின் கல்விப்பொறுப்பாளரே முன்னின்று மேற்கொண்டார். மொத்தச்செலவு 5000/-

(நிதி உதவி : பேரவையின் கல்வி நிதியம்)

● திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பாடசாலை நூலகங்களும், மற்றும் சில நூலகங்களுக்கும் பேரவையால் நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இதற்கான வைபவம் தி/புனித பிரான்சிஸ் சவேரியார் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது வடகிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. க. தியாகராஜா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூல்களை வழங்கினார். வழங்கப்பட்ட நூல்களின் மொத்தப் பெறுமதி : 60,000/-

(நிதி உதவி : டச்உட் கோவில் நிறுவனம் நெதர்லாந்து)

● வழமைபோல இவ்வாண்டும் திருவாசகமுற்றோதல் 19 - 12 - 1994ல் பேரவையின் மகேஸ்வரி மண்டபத்தில் பேரவையின் காப்பாளரும் சைவ அறிஞருமான ஞானசிரோன்மணி பண்டிதர் திரு. இ. வடிவேல் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

● பேரவையின் சிறுவர் அணியினரும், தொண்டர் அணியினரும், இந்து மகளிர் அணியினரும், நலன் புரிப் பிரிவினரும் திருவெம்பாவைக் காலத்தின் போது திருக்கோணமலைத் திருநகரில் நடைபஜனையை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

● பேரவையின் நான்காவது திருவாசகப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றுள்ளன. எல்லாமாக அறுபது போட்டியாளர்கள் மேற்படி போட்டிகளில் பங்குபற்றினர்.

● இலங்கை இந்து இளைஞர் பேரவையின் வளர்ச்சி கருதி நாம் பத்தாயிரம் ரூபாவை அண்மையில் அன்பளிப்புச் செய்தமையை மகிழ்வுடன் தெரியத்தருகின்றோம். இப்பணத்தில் அவர்கள் 5000/- ரூபாவை அம்பாறை மாவட்ட இந்து இளைஞர் பேரவைக்கு வழங்கியுள்ளார்கள்

● மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைக்கு 20,000/- ரூபா பெறுமதியான நிரலிடும் இயந்திரத்தை இலங்கை இந்து இளைஞர் பேரவையினூடாக நாம் வழங்கி உள்ளோம்.

● எமது பேரவையின் மதிப்பார்ந்த பொதுச்செயலாளரும் இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைமைச்செயலாளரும் நாடறிந்த சமயசமூக

(தொடர்ச்சி 24ம் பக்கம்)

---

(22ம் பக்கத்தொடர்ச்சி)

2. உபநிடதங்களில் சில செய்யுள் நடையில் அமைந்தவை. சில உரைநடையில் அமைந்தவை; சில இரண்டும் கலந்த நடையில் அமைந்துள்ளன.

3. இறைவன், ஆன்மா, உலகம் ஆகிய மூன்றைப் பற்றிய தத்துவ சிந்தனைகளே உபநிடத்தில் பேசப்படுவன. இவைப்பற்றிய கருத்துக்கள் குருவுக்கும் சீடனுக்கும் இடையில் அமைந்த உரையாடல்களாகவும், வினாவிடைகளாகவும் உள்ளன.

4. சில மகாவாக்கியங்கள் :
   1. தத்துவமஸி - நீதான் அது.
   2. அகம் பிரமாஸ்மி - நான் பிரமம்.
   3. சோ(அ)கம் அஸ்மி - நானே அவன்.

5. உபநிடதங்களில் பேசப்படும் விஷயங்களின் சுருக்கம்.

ஆத்மா பிரமம் அவை இரண்டுக்குமுள்ள தொடர்பு உடலுக்குள் ஆத்மாபோல உலகுக்கும் ஆத்மா உண்டு. அந்த உலக ஆத்மாவே பிரமம். உலக ஆத்மாவின் உண்மையை மிக மகாவாக்கியங்கள் உணர்த்துகின்றன. ஒருமை வாதம், பன்மை வாதம் ஏற்பட்ட முறை பிரமத்தின் இரு நிலைகள், ஆத்மாவின் உண்மை இயல்பு என்பன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(23ம் பக்கத்தொடர்ச்சி)

சேவையாளருமான '' சிவஞானச்செல்வர் செல்லப்பா சிவபாதசுந்தரம் அவர்களுக்கு இந்து கலாசார இராஜாங்க அமைச்சினால் வழங்கப்பட்ட கௌரவப் பட்டமான சிவஞானச் செல்வர் விருதினைப் பாராட்டி ஓர் மாபெறும் பாராட்டு விழா 30 - 12 - 1994ல், தி / புனித பிரான்சிஸ் சவேரியார் மகாவித்தியாலயத்தில் எமது இந்து இளைஞர் மன்றங்களால் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. அன்னாரைப்பாராட்டி தமிழ்மணி திருமதி பா. நல்ல ரெட்ணசிங்கன், மேலதிக அரசாங்க அதிபர் திரு. ந புவனேந்திரன், குறளமுத அதிபர் திரு. கா. விநா யகசோதி, இ கி ச. இந்துக்கல்லூரி அதிபர் திரு சி. தண்டாயுதபாணி உட்பட தம்பலகமம், பட்டித் திடல் இந்து இளைஞர் மன்றத் தலைவர் மதிப் பார்ந்த செயலாளர் ஆகியோர் உரையாற்றினர். ஞானசிரோன்மணி பண்டிதர் திரு இ வடிவேல் பாராட்டுப்பத்திரத்தை வாசித்தளிக்க இறைபணிச் செம்மல் காந்தியப் பெரியார் திரு பொ கந்தையா பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார் பேரவை யின் சார்பில் பேரவையின் துணைத்தலைவர் திரு கு. கோணாமலை அவர்களால் விழா நாயகன் மோதிரம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார்.

● பேரவையின் முகாமைத்துவப் பயிற்சிக் கருத் தரங்கு 30 - 12 - 1994ல் தி / புனித பிரான்சிஸ் சவேரியார் மகாவித்தியாலயத்துல் சிறப்பாக நடத் தப்பட்டது கனேடிய உலக பல்கலைக்கழக சேவைத் திருக்கோணமலைத்திட்டப் பணிப்பாளர் திரு. அ சிவலோகநாதன் அவர்கள் பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்ட இக்கருத்தரங்கைப் பேரவை யின் திட்ட அலுவலகர் திரு. ந. சிங்காரவேல் நெறிப்படுத்தினர்.

● இவ்வாண்டுக்கான எமது வருடாந்த ஒன்று கூடல் 31 - 12 - 1994ல் தி / புனித பிரான்சிஸ் சவேரியார் மகாவித்தியாலயத்தில் சிறப்பாக நடத் தப்பட்டது. கலந்து கொண்ட அனைவருக்கும் உவந் தளிப்புக்கள் வழங்கப்பட்டன பிரதம விருந்தின ராக திருக்கோணமலை நகராட்சி மன்றத்தின் தலைவர் திரு. பெ. சூரியமூர்த்தி அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக உரக்கூட்டுத்தாபன திருக்கோணமலைக் கிளை முகாமையாளர் திரு. ஜி. சிதம்பரநாதன் அவர்களும், இலங்கை இந்து இளைஞர் பேரவையின் பிரதித் தலைவர் திரு வீ. தி. அ தில்லைநாதரும் கலந்து சிறப்பித்தனர்.

மொத்தச் செலவு 30,000/- (பேரவை நிதி)

---

(18ம் பக்கத்தொடர்ச்சி)

## மாயை

தத்துவங்கள் தம்மில் தோன்றுவதற்கும் ஒடுங்கு வதற்கும் இடமாகவுள்ளது மாயை ஆகும். ஆன்மாக் கள் அனுபவிப்பதற்கான தனு கரண, புவன போகங் கள் ஆகியவற்றை தோற்றுவித்து அதனால் வரும் இன்பதுன்பங்களை நுகர்வித்து ஒடுக்கும் இத்திற மையை உடையது மாயாமலம் ஆகும். மா என்பது தோன்றுதல் யா என்பது ஒடுங்குதல் எனப் பொருள் படும். தனு என்பது உடல் என்றும், கரணம் என் பது மனம் புத்தி சித்தம், அகங்காரம் என்னும் நான்கு அந்தகரணங்கள் என்றும், புவனம் என்பது பூமி என் றும் போகம் ஆன்மா அனுபவிப்பதற்கான போகப் பொருள்படும். ஒவ்வொரு ஆன்மாவும் செய்யப்பட்ட வினைக்கு ஏற்ப இத்தனுகரண, புவனம் போகங்கள் இறைவனால் அனுபவிப்பதற்காக கொடுக்கப்படு கின்றது. ஆன்மாவை ஆணவ மலத்தில் நின்று விடு படுவதற்காகவே இறைவன் கன்மம், மாயை ஆகிய இரு மலங்களையும் கொடுக்கிறார். அதனாலே தான் உமாபதி சிவனாரும்

'' விடிவாமளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து '' என்று கூறி விளங்க வைத்தார்.

ஆன்மா வீடு பேறடைய வேண்டுமானால் தீட்சை பெற வேண்டும். தீட்சையினாலே பிராப்த மலம் ஒழிக்கப்படுகிறது ஆகாமியமலமும் தீண்டாது ஆன்மா ஒளிப்பிரகாசமாகிறது. இதனால் இருவினை யொப்பு மலபரிபாகம், சக்திநிபாதம் ஆகிய படிகளி னால் வீடு பேறு கிடைக்கப்பெறும் நல்வினையினால் வரும் இன்பத்தையும் தீவினையினால் வரும் துன்பத் தையும் ஒப்பு நோக்குதல் இரு வினையொப்பு ஆகும். இதையே '' ஓடும் செம் பொன்னும் ஒக்க மதிக்கின்ற இயல்பு '' என்று கூறினார்கள் பெரியோர்கள். இந்த இருவினையொப்பு ஏற்படுமானால் மலபரிகாம் அடைந்துள்ளது எனக் கொள்ள வேண்டும்.

இந்த இருவினையொப்பு மலபரிபாகம் ஏற்பட் டால் சத்திநிபாதம் ஏற்படும். சத்திநிபாதம் என்றால் சத்தி பதிதல் எனப் பொருள்படும். திருவருட்சத்தி ஆன்மாவிலே பதிந்து சிவமாம் தன்மையை ஆன்மா வுக்கு அளிக்கிறது ஆன்மாவில் திருவருட்சத்தி (சத்தி நிபாதம்) இவ்வுலக ஆசையை வெறுத்து இறைவன் பால் மனம் லயித்துவிடும். '' ஆலயங்களிலே முன் னிலையில் அமைந்திருக்கின்ற நந்தி இறைவனை நோக்கிய வண்ணம் இருப்பது போல '' இந்த ஆன் மாவின் மனமும் செயலும் இறைவனை நோக்கிய வண்ணமே அமையும். இந்நிலையில் இருக்கிற ஆன் மாவைழ் திருவருட்சத்தி இறைவன் பால் ஈர்த்துக் சென்று இறைவன் திருவடியை நாடி சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதவியாகி நான்கினில் ஒன்றை ஆன்மாவுக்குத் தருகிறது. இதையே சித்தாந் தம் நமக்குப் போதிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய வினா விடைப் புதிர் - 14

இந்து சமய தத்துவங்களையும் அதன் உண்மைகளையும் அறியும் பொருட்டு இதன் கீழ் தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் இப்பத்திரத்தில் விடை எழுதி அனுப்பி வையுங்கள்.

1. மாணிக்கவாசக சுவாமிகள் முதல் பாடிய திருவாசகம் எது ?

2. ஆணவத்தின் தன்மைகள் நான்கு தருக.

3. சமயக்குரவரில் யோகநெறியில் நின்றவர் யார் ?

4. ஆலயம் என்பதன் பொருள் என்ன ?

5. லிங்கம் என்பதன் கருத்து என்ன ?

6. பஞ்சாட்சரம் எது ?

7, சிவனின் வாகனம் எது ?

8, மகாசிவராத்திரி விரதம் எத்திதியில் அனுஷ்ட்டிக்கப்படுகிறது ?

9, எவ்வகை ஆன்மாக்களை சகலர் என அழைப்பர் ?

10, குங்கிலியத் தூபம் இட்டு இறைவனடி சேர்ந்த நாயனார் யார் ?

குறிப்பு :- இப்பத்திரத்தில் அல்லது இதனை இணைத்து விடை எழுதினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்,

பெயர் :-

முகவரி :-

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர்,
'' சிவநெறி ''
தி: மா. இ: இ: பேரவை
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.

முடிவுத் திகதி 15 - 03 - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சிவநெறி சிறுவர் வட்டத்தில் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர ஆர்வமுள்ளோர் சிவநெறியில் வெளியாகும் இரு கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் தரமான ஆக்கங்கள் சிவநெறியில் அவ்வப்போது வெளியாகும்.

ஆக்கங்களை மாணவர் தாமாகவே எழுதினார் என்பதை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.

உறுப்பினர் உறுப்புரிமை அட்டை அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி·

ஆசிரியர்,
''சிவநெறி''
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.




## சஞ்சிகைக் குழு

★ திரு. கு. கோணாமலை ஆசிரியர்
★ திரு. க. சவுந்தரராசா துணைஆசிரியர்
★ திரு. வ. தங்கராசா
★ திரு. செ. சிவபாதசுந்தரம்
★ திரு. சு. கனகசபாபதி
★ திரு. நா. காளிராசா
★ திரு. கெ. தர்மகுலராசா
★ புலவர் வை. சோமாஸ்கந்தர்
★ திரு. பூ. புவனேஸ்வரன் வி. பொறுப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறி வளர வாழ்த்துகின்றோம்

# நடா ரேடர்ஸ்

## 226, பிரதான வீதி, திருகோணமலை.


**உத்தரவாத விநியோகத்தர்கள் :-**

- றினாய் (RINNAI) காஸ் அடுப்புகள் (ஜப்பான்)
- ஹொட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகளுக்குத் தேவையான பலவகையான காஸ் அடுப்புகள்.
- வீட்டுப் பாவனைக்குரிய எட்குறோ (EDGRO) நீர் இறைக்கும் இயந்திரம் (இத்தாலி)
- வில்லியர்ஸ் - எட்குறோ விவசாய கைத்தொழில் நீர் இறைக்கும் இயந்திரம் (இந்தியா)
- பென்டா (PENTA) மின் விசிறிகள்.
- ஜெனோமி (JANOME) தையல் இயந்திரங்கள் (ஜப்பான்)
- டொயோஸ்டார் மின்விசிறிகள்.
- மிற்சுபிஷி (MITSUBISHI) மேசை விசிறிகள் (ஜப்பான்)
- என்பீல்ட் (ENFIELD) ஜெனறேட்டர்கள் (இந்தியா)

மற்றும் கிறைண்டர்கள் (GRINDERS), பிரஷர் குக்கர்கள் (PRESSURE COCKERS) இங்கு பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சிவநெறி வளர வாழ்த்துகின்றோம் "



உப உணவுப் பொருட்கள், கோழித்தீன், சாப்புச்சாமான்கள்
மொத்தமாகவும் சில்லரையாகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்.

# E. L. G. S.

***No. I. Cash St., Main St. Junction,***
***Trincomalee.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் ''

திருக்கோணமலை மாவட்டத்தின் பல பாகங்களிலும் சமயப்பணியும்
சமூகப்பணியும், அகதிகளுக்கான பணிகளையும் ஆற்றுகின்ற
முதன்மையான இளைஞர்களின் அமைப்பே
திருக்கோணமலை மாவட்ட
இந்து இளைஞர் பேரவை ஆகும்.

## இதன் வளர்ச்சிக்கு தாராளமாக உதவுங்கள்

ஜெய்ஷான் பிரிண்ட் 98 - பி, இரத்தினம் வீதி, கொழும்பு - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org